பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 28 வியாழக்கிழமை 13.08.2020 கதிர் 277

### இது ரகசியம் அல்ல!

எதிர்பார்த்தது கிடைக்காவிட்டாலும் கிடைத்ததையாவது மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம் என்றால் அதற்கும் வேட்டு வைத்துத் தரம் இறக்கும் வேலைதான் நடந்திருக்கின்றது.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் சுமார் அரை லட்சம் பக்கம்02 »

# தமிழரசுத் தலைமையை மாற்றும்படி நாங்கள் யாரும் கேட்கவேயில்லை!

## நிலைமையைத் தெளிவுபடுத்துகிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், ஒகஸ்ட். 13

தமிழரசுக் கட்சியின் தலைமையை இப்போது மாற்ற வேண்டும் என்ற தேவை ஏதும் எழவில்லை. அப்படி மாற்ற வேண்டும் என யாரும் கோரவுமில்லை.

– இவ்வாறு நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் தமிழரசுக்கட்சியின்யாழ்.மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் தன்னை அரசியலுக்குக் கூட்டி வந்தவர்களுள் ஒருவர் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார். பக்கம் 02 »

## புதிய அரசின் அமைச்சரவை பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஓக 13

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான புதிய அரசின் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

பதவிப் பிரமாண நிகழ்வு கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகுல் மடுவ மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய அமைச்சரவையில் பிரதமர் உட்பட 25 பேர் அங்கம் வகிக்கின்றனர். இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 39 ஆகும். மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர்களாக 23 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து புதிய அமைச்சரவை மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள பக்கம் 02 »

## தமிழ்,முஸ்லிம்களை குறிக்கும் பகுதி சிங்கக் கொடியில் நீக்கம்

### புறக்கணிப்பை வெளிப்படுத்திய கோட்டா அரசு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக 13

தமிழ், முஸ்லிம் இனங்களையும் பௌத்தம் தவிர்ந்த ஏனைய மதங்களையும் புறக்கணித்து இலங்கையின் புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் நேற்று இடம்பெற்றது.

இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத் பக்கம் 02 »

## ரணில் குழுவுடன் சம்பந்தன், சுமந்திரனுக்கும் ஆணைக்குழு முன்னால் ஆஜராக அழைப்பாணை

கொழும்பு, ஓக.13

நல்லாட்சி அரசாங்கத்தின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அப்போதைய சில அமைச்சர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி தலைவர்களுக்கும் எதிர்வரும் 21 ஆம் திகதி அரசியல் பழிவாங்கல் தொடர்பாக கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு நேற்று அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் டொக்டர் நிஹால் ஜயத்திலக்க அரசியல் பழிவாங்கல் தொடர்பாக கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் தாக்கல் செய்த முறைப்பாட்டுக்கு ஏற்ப இவர்களுக்கு அழைப்பாணை பிறப்பிக்கப் பக்கம் 11 »

## தமிழ்க் கூட்டமைப்பினரே தமிழரின் ஏக பிரதிநிதிகள்

### மஹிந்த தரப்புக்கு சம்பந்தன் பதிலடி

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தமிழ் மக்களும் அதனை மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார். 11 »

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு 3 பேராசிரியர்கள் பேரவையினால் தெரிவு!

### பேராசிரியர் சிறிசற்குணராஜா புள்ளிகளால் முன்னிலையில்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த ஆறு பேரில் மதிப்பீட்டுக் குழு மற்றும் பேரவையின் மதிப்பீடுகளின் அடிப்படையில் மூவரின் பெயர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கப் பக்கம் 02 »

## கூட்டமைப்புத் திருந்தாவிடில் அதனை கடவுளால் கூடக் காப்பாற்ற முடியாது

### ரெலோத் தலைவர் செல்வம் கூறுகின்றார்



மக்களின் சிந்தனை கூட்டமைப்பிற்கு நன்றாக உணர்த்தப்பட்டிருக்கின்றது, அதனை இனியும் உணர்ந்து தன்னைத் திருத்தாவிட்டால் கூட்டமைப்பைக் கடவுளாலும் கூடக் காப்பாற்ற முடியாது என தமிழ்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா கற்குழிப் பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் பக்கம் 10 »

## சனியன்று கூடுகின்றது தமிழரசின் அரசியல் குழு

### திருமலையில் சம்பந்தன் தலைமையில்

யாழ்ப்பாணம், ஓக 13

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் முற்பகல் 11 மணியளவில் இந்தக் கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம், அரசியல் குழுவின் உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், ப.சத்தியலிங்கம், சி.வி.கே. சிவஞானம் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளைப் பெற்று வெற்றிவீரராகக் கொழும்புக்குப் புறப்பட்ட அங்கஜன் இராம நாதனின் எதிர்பார்ப்பு குறைந்தபட்சம் இராஜாங்க அமைச்சாவது ராஜபக்ஷக் கள் தருவார்கள் என்பதாகத்தான் இருந் தது.

பாவம். அவர் எதிர்பார்ப்பில் மண் விழுந்தது. அங்கஜன் இராமநாதனின் வெற்றியைத் தமது அரசியல் லாபத்துக் குப் பெரிய விடயமாகப் பீற்றிக் கொண்ட ராஜபக்ஷக்கள் அமைச்சர்கள் நியமனத் தில் அங்கஜனை வெட்டி விட்டு விட்டார் கள்.

ஆனாலும், அங்கஜனுக்கு அமைச் சுப் பதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் யாழ்ப்பாணத்தில் கொளுத்துவதற்கு வாங்கி வைத்திருந்த வெடிகளை என்ன செய்வது? அமைச்சுப் பதவிகளுக்குப் பதிலாக ஆறுதல் பரிசாகக் கிடைத்த மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர் பதவி அறிவிக்கப்பட்டபோது அதற்குக் கொளுத்தி மகிழ்ந்தார்கள் அங்கஜன் வட்டத்தினர்.

ஆனால் கொளுத்திய வெடியின் கந்தக மணமும் புகையும் அடங்குவ தற்கு இடையில் அந்தப் பதவியிலும் அரைவாசியைப் பறிக்கும் செய்தி பேரி டியாக வந்து இறங்கியது.

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் மாவட்டந் தோறும் இணைப்புக் குழுவில் தலைவராக நியமிக்கப்பட்ட வருக்கு மேலதிகமாக மாகாண ஆளுநரும் இணைப்புக் குழுவின் இணைத் தலை வராகச் செயற்படுவார் என்பதுதான் அந்தச் செய்தி. ஆக அமைச்சர் பதவியும் இல்லை, இராஜாங்க அமைச்சர் பதவி யும் இல்லை. கிடைத்த மாவட்ட இணைப் புக் குழுத் தலைவர் பதவியிலும் பங்கு போடும் ஏற்பாடு. பாவம் அங்கஜன்.

நேற்றைய மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர் பதவிகளில் நோக்கப்பட வேண் டிய ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு யாரும் நியமிக்கப்படவில்லை என்பது. உள்ளிருக்கும் பிள்ளையான் வெளியே வந்ததும் அவருக்கு வழங்குவதற்காகக் காத்திருப்பில் அது வைக்கப்பட்டிருக் கின்றது போலும்.

இன்னும் ஒரு முக்கிய தகவல்.

கொழும்பில் ஒரு முக்கிய நபரோடு பேசினேன். From the horse's mouth என்பார்கள். அது போல பெற்ற செய்தி. யார், எவர் என்று கேட்காதீர்கள். நானும் சொல்ல மாட்டேன்.

வடக்கில் இந்தத் தேர்தலோடு அடிபட் டுப் போன ஓர் அரசியல்வாதி, பிரதமர் மஹிந்தரை ஏதோ ஒரு வகையில் அணு கியிருக்கின்றார். 'இனி எனக்கு யாழ்ப்பாணத் தில் அரசியல் வேலையில்லை. மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர் பதவியைத் தாருங்கள்' என்ற சாரப்படக் கோரிருக் கின்றார். முன்னர் எம்.பி. அல்லாத சந்திரகுமாருக்கு கிளிநொச்சி மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர் பதவியைக் கொடுத்த மாதிரி இப்போது தாமும் பெறலாம் என அவர் எதிர்பார்த்து இருப் பார் போலும்.

'நான் கைவிரித்து விட்டேன், சரிவராது என்றேன்' என்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

யார் மூலம் அந்தப் பிரகிருதி பிரதமரை அணுகினார், அவரே நேரடியாகப் பிரத மரைத் தொடர்பு கொண்டு கேட்டாரா அல் லது எங்களைப் போன்று இடைநடு வில் தபால்காரர் வேலை செய்யும் ஊடகத் தரப்பு ஊடாகக் கேட்டாரா என்பதைப் பிர தமரிடம் கேட்டறிய முடியவில்லை.

மலிந்தால் சந்தைக்கு வரும்தானே...?

மாம்பழம் போல அழுகி விட்டாலும் கூட...!

★ ★ ★

இன்னொரு கொசுறுத் தகவல். தமி ழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா வின் மகன் கலையமுதன் நேற்று மாலை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனை அவர் வீட்டில் சென்று சந்தித்துப் பேசினார். தற்போதைய அரசியல் களநிலைவரத்தில் இதன் பின்னணி யாது? மலிந்தால் சந்தைக்கு வரும்தானே. அப்போது பார்ப்போம்...!

–மின்னல்–

## தமிழரசுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை நகர சபைப் பிரதேசத் தில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து நேற்று மாலை தாம் நடத்திய கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

சிறீதரன் பத்திரிகையாளர் மாநாட்டில் சொன்ன ஒரு கருத்து வெளியானது. 'நான் தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்கத் தயார்' என்பதுதான் தலைப்பு. ஆனால் அவர் கூறியது என்னவென்று உள்ளே வாசித்துப் பாருங்கள்.

"இப்போது தலைமையில் மாற்றம் ஒன்றும் தேவையில்லை." – என்பதுதான் அவர் கருத்து.

"உங்களைத் தலைமை ஏற்கும் படி கேட்டுக் கொண்டால்?" – என்று அவரிடம் கேட்கப்பட்டது.

"ஆம். எல்லோருமாகக் கேட்டால் நான் பொறுப்பேற்கத் தயார்" – என்றுதான் அவர் பதில் கூறினார். ஆனால் அதற்குத் கொடுக்கப்பட்ட தலைப்பை வாசித்தால் நாளைக்கே தலைமைப் பதவியை அவர் கேட்பது போல உள்ளது.

இரண்டு நாள் கழித்து என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்கள். சிறீதரன் அப்படிச் சொல்லியிருக்கின்றார் நீங்கள் அதற்கு ஆதரவு கொடுப்பீர்களா என்று கேட்டார்கள். நான் அவர் கூறியவற்றை விளங்கப்படுத் தினேன். "இப்போது மாற்றம் தேவை யில்லை. ஆனால் எப்போதாவது அனை வரும் அவரிடத்தில் கேட்டால் அந்தத் தருணத்தில் அவர் பொறுப்பெடுக்கத் தயார்" என்றுதான் கூறியிருந்தார் என்று குறிப்பிட்டேன். அப்படி அந்தத் தருணத்தில் எல்லோரும் சேர்ந்து கேட்டால் என்றால் நானும் அதில் அடங்குவேன்தானே என்று கூறினேன். ஆனால் அடுத்த நாள் பத்தி ரிகைத் தலைப்பு 'கட்சித் தலைமைப் பொறுப்பை சிறீதரன் எடுப்பதற்கு சுமந் திரன் ஆதரவு' என்றிருந்தது.

ஏதோ இருக்கின்ற தலைவரை நாளைக்குத் தூக்கி எறிந்து விட்டு சிறீ தரன் தலைவராகப் போகின்றார், அதற்கு சுமந்திரன் ஆதரவு என்ற மாதிரி இருக் கின்றது அந்தச் செய்தி. அதுதான் அச் செய்திகளின் பின்னணி.

கட்சித் தலைவர் இதற்காக எந்த வித விசனமும் அடையவேண்டிய அவசிய மும் இல்லை. அவர் இதனால் மனம் நொந்து இருந்தால் நானும் சிறீதரனும் வருத்தப்படுகின்றோம். அவரைக் கட்சித் தலைமையில் இருந்து நீக்குவது என்ற எண்ணமுமில்லை. அப்படிச் சொல்லப் படவுமில்லை. மாறாக. இப்போது தலை மையில் ஒரு மாற்றம் தேவையில்லை என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கு எதிர்மாறான கருத்தை ஊடகங்கள் தெரிவித்தன் காரணமாகத் தலைவருக்கு ஏதாவது அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் அது சம்பந்தமாக நான் மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாவை சேனாதிராசா எங்கள் கட்சியின் தலைவர். ஒரு கட்சி பாரிய பின்னடை வைச் சந்திக்கின்ற போது தலைமைப் பொறுப்புகளில் இருப்பவர்கள் தோற்பது வழக்கம். அது ஓர் அறிகுறி. அவர் தோற் றிருக்கின்றார். எங்கள் பொதுச் செயலா ளரும் 6ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டுத் தோற்றிருக்கின்றார்.

ஆகவே இது இரு தோல்விதான். பத்து ஆசனங்கள் கிடைத்தன என்பது எங்க ளுக்கு ஒரு பாரிய தோல்விதான்.

மாவை சேனாதிராசாதான் என்னை அரசியலுக்குள் இழுத்தவர். சம்பந்தன் தான் சுமந்திரனைக் கொண்டு வந்தார் என்றே பலர் கூறுகின்றனர். அதிலும் ஒரு சிறு உண்மை உண்டு.

2004இல் இருந்து 2010 வரை இருந்த நாடாளுமன்றத்தில் இரண்டு தட வைகள் தேசியப் பட்டியல் வெற்றிடம் வந்தது. அந்தத் தேசியப் பட்டியல் ஆச னத்தை நிரப்புமாறு மாவை சேனாதிராசா என்னை வந்து கேட்டார். இது எல்லோருக் கும் தெரிந்த விடயம். நான் அந்த நேரத்தில் இணங்கவில்லை. நான் மறுத்து விட்டேன்.

ஆனால், 2010 இல் மாவை சேனாதிரா சாவும் சம்பந்தனும் இருவருக்குமாகக் கேட்டுக் கொண்ட போது நான் தேசியப் பட்டியல் மூலம் வந்து பணியாற்றினேன். 2015 தேர்தலில் எனக்காக அதிகம் பிர சாரம் செய்தவர் மாவை சேனாதிராசாதான்.

இன்று எங்கள் இருவருக்கும் இடை யில் பாரிய சர்ச்சை ஒன்று எழுந்திருப்பது போன்று ஊடகங்கள் மூலம் ஒரு தோற்றம் கொடுக்கப்பட்டிருப்பது தவறு. எங்களுக்கு இடையில் அப்படி ஒரு போட்டியோ, சர்ச் சையோ கிடையாது. அவர் மீது எனக்குப் பாரிய மதிப்பு இருக்கின்றது.

மற்றக் கூட்டுக் கட்சியினர், எங்கள் கட்சினர் தேர்தலில் எனக்கு எதிராகப் பகிரங்கமாகப் பிரசாரம் செய்த போது அதை நான் அவரது கவனத்துக்குள் கொண்டு வந்தேன். அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் எனது குறை. குற்றச்சாட்டு.

ஒரே ஒரு தடவை மட்டும், விமலேஸ் வரி என்ற பெண்மணி என் மீது நிதிக் குற் றச்சாட்டு சுமந்திய போது மட்டும் நடவ டிக்கை எடுத்தார்.

மற்றைய தருணங்களிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற குறை தான் உண்டு.

தேர்தல் காலத்தில் அந்தக் குறையை நான் சொல்லவில்லை.

தேர்தல் முடியும் வரை எந்த வேட்பாளர் குறித்தும் நான் பகிரங்கமாக குறை சொல்லவில்லை. ஆனால், இப்போது தேர்தல் முடிந்து விட்டது. நான் அவற்றைச் சொல்கிறேன். – என்றார்.

(தேசியப் பட்டியல் எம்.பி நியமனம் தொடர்பாக சுமந்திரன் தெரிவித்த கருத் துக்கள் நாளை பிரசுரமாகும்) (உ)

## யாழ்.பல்கலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.

விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும், கணிதப் புள்ளி விவரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேரா சிரியர் எஸ். சிறிசற்குணராஜாவின் பெயர் முதலாவதாகவும், உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி ஆகியோரின் பெயர்கள் முறையே இரண் டாவது, மூன்றாவதாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையால் பரிந்து ரைக்கப்பட்டுள்ளன.

புதிய துணைவேந்தர் தெரிவு மதிப்பீட் டுக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் இடம் பெற்ற மதிப்பீட்டுகளின் நிறைவில் பேரா சிரியர் எஸ். சிறிசற்குணராஜா 82 புள் ளிகளையும், பேராசிரியர் கு.மிகுந்தன் 72 புள்ளிகளையும், பேராசிரியர் ரி. வேல் நம்பி 71 புள்ளிகளையும் பெற்றிருந்த னர்.

மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், 61 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தையும், முன்னாள் துணைவேந்தரும், கணிதப் புள்ளிவிபர வியல் துறையின் முதுநிலை விரிவுரை யாளருமான பேராசிரியர் இ.விக்னேஸ் வரன், 51 புள்ளிகளைப் பெற்று ஐந்தா வது இடத்தையும் பெற்றிருந்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்காக கடந்த மே மாதம் 15 ஆம் திகதி பல்கலைக்கழகப் பதிவாளரினால் பத்திரிகைகள் மூலமா கக் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கமையக் கிடைக்கப்பெற்ற 7 விண் ணப்பங்களில் ஒன்று – யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ந. தனேந்திரனுடை யது. உரிய முறைப்படி நிரப்பப்படாத கார ணத்தினால் அது நிராகரிக்கப்பட்டிருந் தது.

முன்னாள் துணைவேந்தரும், கணி தப் புள்ளிவிபரவியல் துறையின் முது நிலை விரிவுரையாளருமான பேராசிரி யர் இ.விக்னேஸ்வரன், உயர் பட்டப் படிப் புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல் நம்பி, மருத்துவ பீடாதிபதி வைத்திய நிபுணர் எஸ். ரவிராஜ், விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும், கணிதப் புள்ளி விவரவியல் துறையின் முதுநிலை விரிவு ரையாளருமான பேராசிரியர் எஸ். சிறி சற்குணராஜா, புள்ளி விவரவியல் துறைப் பேராசிரியர் செ. இளங்குமரன் ஆகியோ ரின் விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பேராசிரியர் அபே குணவர்த்தன தலைமையிலான மதிப் பீட்டுக்குழுவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆறு பேரிலிருந்து ஐந்து பேரைத் தெரிவு செய்வதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட மூவருடன், பல்கலைக் கழக மூதவையைப் பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில் பேரவையினால் முன்மொ ழியப்பட்ட இருவரையும் கொண்ட, மதிப் பீட்டுக்குழு நேற்றுக் காலை கூடியது.

இந்த மதிப்பீட்டுக்குழு ஒவ்வொரு விண் ணப்பதாரிகளாலும் தனித்தனியாக குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்ட அளிக் கைகளையும் மதிப்பீடு செய்த பின்னர் – புள்ளி விவரவியல் துறைப் பேராசிரியர் செ. இளங்குமரன் புள்ளிகளின் அடிப்ப டையில் 6ஆவது இடத்தைப் பெற்ற நிலை யில் ஏனைய 5 பேரின் பெயர்கள் நேற்றுப் பிற்பகல் பேரவைக்கு முன்மொழியப் பட்டது.

மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களால் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும், தனித் தனியாக மதிப்பீடு செய்யப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு பேரவை உறுப்பி னர்களும் – ஒவ்வொரு விண்ணப்பதாரிக ளையும் சுற்றறிக்கையின் படி தனித்தனி யாக மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர். சுயாதீன மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்களின் தனித்தனி மதிப்பீட்டுப் புள்ளிகள், பேரவை உறுப்பினர்களின் தனித்தனி மதிப்பீட்டுப் புள்ளிகள் ஆகியவற்றின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் பெறும் திறமைப் பட்டியல் பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன், தகுதி வாய்ந்த அதி காரியினால் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக் கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு ஊடாகத் தனது பரிந்துரையை ஜனாதி பதிக்கு முன்வைக்கும்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் படி, ஜனாதி பதிக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு வரைத் தெரிவு செய்வார்.

## தமிழ், முஸ்லிம்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றிய கோட்டாபய அரசின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்வு நேற்று ஜனாதிபதி முன்னிலை யில் இடம்பெற்றது.

இந்தப் பதவி ஏற்பை முன்னிட்டு கண்டியில் அலங்காரங்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறு மேற் கொள்ளப்பட்டிருந்த அலங்காரங்களில் பௌத்த மதக் கொடிகள் மட்டுமே காணப்பட்டன. ஏனைய மதக் கொடிகள் அங்கு இல்லை.

இதேபோன்று வீதிகளில் தேசியக் கொடிகள் போன்று பறக்க விடப்பட்டிருந்த கொடிகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக் களைக் குறிக்கும் பகுதிகள் நீக்கப்பட்டு வெறும் சிங்கக் கொடிகள் மட்டுமே பட் டொளி வீசிப் பறந்தன.

இது தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தி யில் பெரும் விசனத்தையும் வெறுப்புணர் வையும் உண்டுபண்ணியுள்ளது.

## புதிய அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களை ஆசீர்வதித்தனர்.

(நேற்றுப் பதவியேற்ற புதிய அமைச் சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர்கள் விவரம் உள்ளே)

## சனியன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் எஸ்.எக்ஸ்.குலநாயகம் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப் படும் என்று கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

# நிரந்தர தீர்வு வேண்டும்: தப்பிப்பிழைக்க முடியாது

## மஹிந்தவுக்கு சம்பந்தன் எச்சரிக்கை





மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கியே ஆக வேண்டும். இனியும் சாக்குப்போக்குச் சொல்லாமல் நிரந்தர அரசியல் தீர்வை அரசு வழங்க வேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசு தப்பவே முடியாது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகளைத் திட்டமிட்டு சிதறடித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனங்களை ஆளும் கட்சியினர் குறைத்துள்ளனர். எனினும், நாம் பலம் குறையவில்லை. இனிவரும் காலங்களில் இழந்த ஆசனங்களை நாம் கைப்பற்றியே தீருவோம்.

மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள மஹிந்த அரசை சர்வதேச சமூகம் நன்கு உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு இருக்கின்றது. கடந்த காலங்களில் செயற்பட்டதைப் போன்று இனியும் அரசு செயற்பட முடியாது.

நல்லாட்சி அரசு மேற்கொண்ட புதிய அரசமைப்புக்கான பணிகள் இடைநடுவில் நிற்கின்றன. அந்தப் பணிகளை இந்த அரசு ஆரம்பிக்க வேண்டும்.

இந்த அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் உள்ளது. எனவே, புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது சுலபமானது.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும் – என்றார்.

# தேசியப் பட்டியல் விவகாரம்: துரைராஜசிங்கமே பொறுப்பு

## சம்பந்தன் கைவிரிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில் நான் பதிலளிக்கமாட்டேன். இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் துரைராஜசிங்கத்திடம் கேட்கவும். அவர்தான் இந்த விடயதானத்துக்குப் பொறுப்பு.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் அதன் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கே வழங்க வேண்டும் என்று கட்சியின் யாழ். மாவட்டக் கிளை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. எனினும், அந்தத் தீர்மானத்தை மீறி அம்பாறை மாவட்டம், நாவிதன் வெளி பிரதேச சபையின் தவிசாளர் தவராசா கலையரசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. அதை உறுதிப்படுத்தும் வகையில் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது. இதையடுத்து தமிழரசுக் கட்சி மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சி



களும் கடும் அதிருப்தியடைந்துள்ளன.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோது,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் யாருக்கு உரியது என்பதை கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கமே தேர்தல்கள் செயலகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். எனவே, இந்த விவகாரம் தொடர்பில் நான் பதிலளிக்கமாட்டேன். இது தொடர்பில் துரைராஜசிங்கத்திடம் கேட்கவும். அவர்தான் இந்த விடயதானத்துக்குப் பொறுப்பு – என்று தெரிவித்தார்.

# மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நியமனம் ஹரிணி அமரசூரியவுக்கு!



தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு பேராசிரியர் ஹரிணி அமரசூரிய பெயரிடப்பட்டுள்ளார்.

இதன்காரணமாக பல்கலைக்கழக பேராசிரியர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளார் என ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இன்று(புதன்கிழமை) இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அரசியல் பழிவாங்கல்கள் ஆராய 162 முறைப்பாடுகள்! ஜனாதிபதி ஆணைக்குழுவில்

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் புதிதாக 162 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 48 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய 114 முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இது வரையிலான காலப்பகுதியில் மொத்தம் ஆயிரத்து 842 முறைப்பாடுகள், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வை ஒட்டி கிளிநொச்சியில் பால்சோறு பரிமாற்றம்

கிளிநொச்சி, ஓக.13

அமைச்சுப் பதவிகள் பொறுப்பேற்பு நிகழ்வை அடுத்து கிளிநொச்சியில் பொதுஜன பெரமுன கட்சியினர் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனை முன்னிட்டு கிளிநொச்சி ஏ9 வீதியால் சென்றவர்களுக்கு பால்சோறு பரிமாறப்பட்டுள்ளதுடன், பட்டாசுகளும் கொளுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் உள்ள பொதுஜன பெரமுன ஆதரவாளர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.


புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் இன்று காலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலுள்ள மகுல்மடுவமண்டபத்தில் வைத்து பதவியேற்றிருந்தனர்.

# தூய்மையான வவுனியா நகரம் சூழலை காக்கும் செயற்றிட்டம்!

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் வவுனியா நகரசபையினருடன் இணைந்து சூழலைப்பாதுகாக்கும் சமூக நலன் செயற்றிட்டமான 'தூய்மையான வவுனியா நகரம்' எனும் செயற்றிட்டம் வவுனியா பழைய பஸ் நிலையத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் சமூக நலன் சார்ந்த செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா நகர்ப்பகுதிகளில் முக்கிய இடங்களில் வைப்பதற்காக முதற்கட்டமாக 36 குப்பை தொட்டிவைத்தல் மற்றும் அதனுடன் இணைந்தவாறான மரநடுகை செயற்றிட்டமும் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் தலைவர் எஸ். சுஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன், உப நகரபிதா கு.குமாரசாமி, செயலாளர் இ.தயாபரன், நகரசபை உறுப்பினர் ரி.கே. இராஜலிங்கம், வவுனியா பிராந்திய பிரதி சுகாதார



சேவைப்பணிப்பாளர் மகேந்திரன், சுகாதாரவைத்திய அதிகாரி வைத்தியர் பிரிஸ்குறாஸ், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ் சலால் டி சில்வா வவுனியா பொலிஸ்நிலைய பொறுப் பதிகாரி மானவடு. வர்த்தகர் சங்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# சொத்துவிவரங்கள் சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு நடவடிக்கை!

பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களில், இதுவரை தமது சொத்து விவரங்களை அறிவிக்காத வேட்பாளர்களின் பெயர்களை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் களமிறங்கிய வேட்பாளர்கள், வேட்பு மனுத் தாக்கல் செய்து முதல் மூன்று மாதங்களுக்கு தமது சொத்து விவரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவியேற்பதற்கு முன் தமது சொத்து விவரங்கள் அடங்கிய அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வேட்பு மனுத் தாக்கல் செய்து தற்போது சுமார் ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ளன எனவும் பெப்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஏழாயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்த நிலையில், அவர்களில் பெரும்பாலனவர்கள் இதுவரை தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்தவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சொத்து விபரங்களை அறிவிக்காதவர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரி, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றை அனுப்பியுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு பதில் கிடைத்தவுடன் அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ள தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# குடியாட்சி பெயரில் முடியாட்சி

கொரோனாத் தொற்றுப் பேரிடருக்கு மத்தியிலும் இலங்கை, ஜனநாயகத் தேர்தல் ஒன்றை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கின்றது. அதுவும் வன்முறைகள் மிகவும் குறைந்த ஒரு ஜனநாயக நிகழ்வு தேசிய ரீதியில் ஒப்பேறியிருக்கின்றது.

கொரோனாப் பேரிடருக்கு மத்தியில் இந்தச் சாதனையை நிலைநாட்டிய முதல் தெற்காசிய நாடு என்ற பெருமையை இதன் மூலம் இலங்கை ஈட்டியுள்ளது.

இது உண்மையில் இலங்கைக்குக் கிடைத்த ஜனநாயக வெற்றியா? இப்படி ஒரு தேர்தலை நடத்தி முடித்தமைக்காக இலங்கை பெருமைப்பட முடியுமா?

ஆம். நிச்சயமாக இது ஒரு ஜனநாயக வெற்றிதான். இந்தத் தேர்தலை இந்தளவு நெருக்கடிக்கு மத்தியில் நடத்தி முடித்தமை வெற்றிதான்.

ஆனால், இந்தத் தேர்தலின் விளைவு - பெறுபேறு - ஜனநாயகத்திற்கான வெற்றியாக அமையப் போவதில்லை என்பது கண்கூடு.

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் இதிலும் விடப் பாரிய வெற்றிகள் சில தரப்புகளுக்குக் கிடைத்திருக்கின்றன. 1977 இல் பிரதமரான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து இடங்கள் கிடைத்தன. அதனை வைத்துக் கொண்டுதான் 1978 இல் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையைக் கொண்ட புதிய அரசமைப்பை அவர் உருவாக்கித் தன்னை ஜனாதிபதியாக்கிக் கொண்டார்.

ஆனால், இப்போது இப்படி ஒரு வரலாற்று வெற்றி கிடைத்திருப்பது வித்தியாசமானது.

இப்போது இந்தப் பெருவெற்றி ஒரு தனித்த குடும்பத்தை நாட்டில் மிகப் பலமிக்க தரப்பாக மாற்றியிருக்கின்றது.

ஏற்கனவே இந்தக் குடும்ப ஆட்சி நாட்டில் சுமார் ஒரு தசாப்த காலம் இருண்ட ஆட்சியை ஏற்படுத்தி, வரலாற்றுத் தவறு இழைத்தது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் - ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் - முக்கிய அரச பதவிகளை வகிக்கின்றமையால் இது ஏறத்தாழ ஒரு முடியாட்சி நிலைமைதான்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கின்றமையுடன், பாதுகாப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ள நிலையில், அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவி வகிக்கிறார்.

இவர்களைத் தவிர, பிரதமரின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷ அமைச்சரவை அந்தஸ்துள்ள இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

மேலும் ஜனாதிபதியின் மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷ அமைச்சரவை அந்தஸ்துள்ள நீர்பாசனத்துறை அமைச்சராகவும் உள்நாட்டு பாதுகாப்பு, உள்விவகாரம் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார்.

இவரது புதல்வரும் ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சருமான சஷீந்திர ராஜபக்ஷ நெல், தானிய வகைகள், இயற்கை பசளை உணவு, காய்கறி, பழங்கள், மிளகாய், வெங்காயம், கிழங்கு உற்பத்தி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி, உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சகோதரியின் புதல்வர் நிபுண ரணவக்க நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர்களைத் தவிர, ஜனாதிபதியின் மற்றுமொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷ தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நபராக இருப்பார் என அரசியல் அவதானிகளால் தெரிவிக்கப்படுகிறது.

அவர் நேரடியாக அரசில் இடம்பெறாவிட்டாலும் அரசின் இயக்கத்துக்குப் பின்புலத்தில் சூத்திரதாரியாக இருப்பார். முன்னைய 2005 - 2015 தசாப்த இருண்ட யுக ஆட்சிக் காலத்திலும் அவரின் பங்கு, பணி அப்படித்தான் இருந்தது.

போதாக்குறைக்கு இப்போது பெரு வெற்றியுடன் ஆட்சியைப் பிடித்திருக்கும் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் அவர்தான். அந்தக் கட்சியை ஸ்தாபித்து இரண்டரை ஆண்டுக்குள் இத்துணை உயர்வு நிலைக்குக் கொண்டு வந்தமையில் அவரின் பங்கு, பணி அளப்பரியது.

இவ்வாறு முடியாட்சி போல குடியாட்சிக்கு வந்திருக்கும் ராஜபக்ஷக்கள், ஒருபுறம் ஜனநாயகம், நல்லிணக்கம் பற்றி எல்லாம் பேசினாலும் மறுபுறத்தில் பௌத்த, சிங்களத் தீவிர மேலாண்மைப் போக்கில் குறியாக இருக்கின்றார்கள். பேரினவாதம் அங்கு இன வெறியாக ஊற்றெடுத்துப் பொங்கிப் பீறிட்டு நிற்கின்றது.

போதாக்குறைக்கு வீடெரிக்கும் மன்னருக்குக் கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரிகள் போல, துணை போகக் கூடிய கோடரிக் காம்புகள் தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில் இருந்து நாடாளுமன்றுக்குச் சென்றிருக்கின்றார்கள்.

இனி என்ன? தமிழர் தாயகத்தில் இன ஒடுக்கு முறையும் பௌத்த, சிங்கள அராஜக ஆக்கிரமிப்பும் குடும்ப ஆட்சியின் கொடூரங்களாக விரிவடையும்.

அதை எப்படித் தமிழர் தாயகம் தாங்கிக் கொள்ளப் போகின்றது, இந்த ஆக்கிரமிப்பிலிருந்து எப்படி மீளெழப் போகின்றது என்பவைதான் மலைக்க வைக்கும் வினாக்களாகத் தமிழ்த் தேசியம் மீது நீங்காப் பற்று வைத்துள்ள தமிழர் மனதில் தொக்கி நிற்கின்றது.

# தயாசிறி, துமிந்தவுக்கு இராஜாங்க அமைச்சே!




மைத்திரி – ரணில் தலைமையிலான நல்லாட்சியில் முக்கியமான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி தலைமையிலான புதிய அரசின் அமைச் சரவை நியமனத்தில் இராஜாங்க அமைச்சுக்களே வழங்கப்பட்டுள்ளன.

தயாசிறி ஜயசேகர – பத்திக், கைத்தரி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் இராஜாங்க அமைச்சராகவும், துமிந்த திஸாநாயக்க – சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் ஜனாதிபதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

# எமக்கு எதிராக வாக்களித்த மக்களையும் ஒன்றிணைப்பேன்!

## இரா.சாணக்கியன் உறுதி




கூட்டமைப்புக்கு எதிராக வாக்களித்த மக்களையும் ஒன்று சேர்த்து கட்சியை கட்டியெழுப்புவேன் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'எனக்கு வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அனைவருக்கும் பொதுவான நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவேன்.

வருங்காலத்தில் தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்புவது எனது மிகவும் முக்கியமான கடமையாக இருக்கும். தமிழரசுக்கட்சியை மீளகட்டியெழுப்பிவெற்றியை நோக்கிகொண்டு செல்வதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுப்பேன். கட்சியின் மத்திய குழு எடுக்கும் தீர்மானங்களை கட்டியெழுப்புவது எனது கடமையாக இருக்கும்.

கிழக்கை மீட்கப்போகின்றோம் எனவும் பிரதேசவாதங்களையும் பேசி வாக்குகேட்டவர்கள் அனைவரும் அமைச்சு பதவிகளை இந்த அரசாங்கத்திடம் கோரவேண்டும்.

அதன்மூலம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அதேபோன்று அதனைவிட தமிழ்த் தேசியத்தைப் புறக்கணித்து அபிவிருத்திக்காக வாக்களித்த மக்கள் அவர்களின் காரியாலயத்தை முற்றுகையிட்டு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தங்களை வழங்கவேண்டும்.

எங்களிடமும் வாருங்கள் தமிழர்களுக்கு எங்காவது அநீதி நடந்தால், தமிழர்களின் நில அபகரிப்பு, தமிழர்களுக்கு எதிராக ஏதாவது அநீதி நடைபெற்றால் அதற்கு எதிரான குரலை நாங்கள் வழங்குவோம். எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை செய்வோம் என்ற அடிப்படையில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் செய்யக்கூடிய அனைத்து அபிவிருத்திகளையும் செய்வோம்.

அத்தோடு சர்வதேச சமூகத்துடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றோம். அபிவிருத்தி செய்வோம் என்று கூறிவந்தவர்கள் செய்யமுடியாத சில வேலைத் திட்டங்களை நாங்கள் செய்வோம்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தாமை காரணமாகவே அங்குள்ள மக்கள் வேறு கட்சிக்கு வாக்களிக்கும் நிலைமை ஏற்பட்டது. அம்பாறை மாவட்டம் என்பது வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முக்கிய பகுதியாகும்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் தமிழர்களின் பிரதிநிதித்துவம் அங்கு உறுதிப்படுத்தப்படவேண்டும். அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் ஆசனம் அம்பாறைக்கு வழங்கப்பட்டமையை நான் வரவேற்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அம்பாறை மாவட்ட மக்கள் கைவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மக்களைக் கைவிடவில்லை. அம்பாறை மாவட்ட மக்களின் ஏகபிரதிநிதிகள்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புதான் என்பதை அம்பாறை மாவட்ட மக்கள் உணர்ந்துகொள்வார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் வாக்கைப் பிரித்து பிரதிநிதித்துவத்தை இல்லாமல்செய்தவருக்கு அவரை அங்கு இறக்கிய கட்சியினர் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்கியி ருக்க முடியும்.

எதிர்காலத்தில் கல்முனை பிரதேச செயலகத்தின் அதிகாரங்களைப் பூரணமாக வழங்குதற்குத் தேவையான அழுத்தங்களை அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக வழங்குவேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தலில் இருந்த கர்ப்பிணிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்!

முல்லைத்தீவு – கேப்பாப்புலவு விமானப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இருந்த மூன்று கர்ப்பிணிப் பெண்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று(புதன்கிழமை) இந்த மூவரும் இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் இருந்து வருகைதந்த 256 பேர், ஓகஸ்ட் 9ஆம் திகதியன்று, கேப்பாப்புலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்புநிலைத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், அவர்களில் மூன்று கர்ப்பிணிப் பெண்கள், மகப்பேற்று காலம் நெருங்கிய காரணத்தால், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கூட்டமைப்பின் கோட்டை எம் வசம்; தமிழரின் மனதை வென்றுவிட்டோம்

## பெருமிதமடைகின்றார் மஹிந்தர்

கொழும்பு, ஓக.12

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையாக விளங்கிய வடக்கு, கிழக்கை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் கைப்பற்றிவிட்டோம். கூட்டமைப்பைவிட அதிக ஆசனங்களைப் பெற்றுத் தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம்.**

**- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பிரதமராக நான்காவது தடவையாகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் முற்பகல் சுபநேரத்தில் அலரி மாளிகையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை 9 ஆசனங்களை மட்டும் பெற்றுள்ளது. ஆனால், அங்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் அதன் பங்காளிக் கட்சிகளும் இணைந்து 11 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன. அதாவது யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தலா 2 ஆசனங்கள் வீதம் 6 ஆசனங்களையும், அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் 4 ஆசனங்களையும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும் நாம் இலகுவாகக் கைப்பற்றியுள்ளோம். மட்டக்களப்பில் பிள்ளையான் சிறைக்குள் இருந்துகொண்டே அம்மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள் ளார் என்பது விசேட அம்சமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையை நாம் கைப்பற்றியதன் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம் என்பது நிரூபணமாகியுள்ளது.

கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தி



கொண்டுள்ளனர். அவர்கள் எம்மை நம்புகின்றனர். எனவே, அவர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனியாவது திருந்த வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் நீரோட்டத்தில் இருக்காமல் நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில்கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும்.

## கொரோனா தொற்றினால் குணமானோர் அதிகரிப்பு!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற் றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 638 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 16 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.நாட்டில் மொத்தமாக அடையாளம் காணப்பட்டுள்ள 2 ஆயிரத்து 880 பேரில் 231 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை 49 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட இணைப்புகுழு தலைவர்கள் நியமனம்

நேற்றுப் பதவியேற்ற மாவட்ட இரணைப்புக்குழ தலைவர்கள் விவரம்:-

கொழும்பு மாவட்டம் - பிரதீப் உதுகொட
கம்பஹா மாவட்டம் - சமன் பிரதீப் விதான
களுத்துறை மாவட்டம் - சஞ்சீவ எதிரிமான்ன
கண்டி மாவட்டம் - வசந்த யாப்பா பண்டார
மாத்தளை மாவட்டம் - எஸ். நாமக்க பண்டார
நுவரெலியா மாவட்டம் - எஸ். பி. திஸாநாயக்க
காலி மாவட்டம் - சம்பத் அத்துகோரள
மாத்தறை மாவட்டம் - நிபுண ரணவக்க
ஹம்பாந்தோட்டை மாவட்டம் - உபுல் கலப்பத்தி
யாழ்ப்பாணம் மாவட்டம் - அங்கஜன் இராமநாதன்
கிளிநொச்சி மாவட்டம் - டக்ளஸ் தேவானந்தா
வவுனியா மாவட்டம் - கே. திலீபன்
மன்னார், முல்லைத்தீவு மாவட்டம் - காதர் மஸ்தான்
அம்பாறை மாவட்டம் - டி. வீரசிங்க
திருகோணமலை மாவட்டம் - கபில அத்துகோரள
குருநாகல் மாவட்டம் - குணபால ரத்னசேகர
புத்தளம் மாவட்டம் - அசோக பிரியந்த
அநுராதபுரம் மாவட்டம் - எச். நந்தசேன
பொலன்னறுவை மாவட்டம் - அமரகீர்த்தி அத்துகோரள
பதுளை மாவட்டம் - சுதர்ன தெனிபிட்டிய
மொனராகலை மாவட்டம் - குமாரசிறி ரத்நாயக்க
இரத்தினபுரி மாவட்டம் - அகில எல்லாவல
கேகாலை மாவட்டம் - திருமதி ராஜிகா விக்ரமசிங்க

## விநோ, செல்வத்துக்கு அமோகமான வரவேற்பு!



கற்குழி பொது அமைப்புக்கள் மற்றும் மக்களின் ஏற்பாட்டில் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வினோநோதராதலிங்கம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்த இவர்கள் இருவரும் மாலை அணிவிக்கப்பட்டு கற்குழி வீதி ஊடாக பிரதேச மக்களால் அழைத்து வரப்பட்டனர். அத்துடன் பொன்னாடை போர்த்தியும் இவர்களை மக்கள் கௌரவித்தனர்.

கற்குழி கிராம அபிவிருத்தி சங்கத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கற்குழி மக்கள் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## யாழ் போதனா பணிப்பாளர் சிறைச்சாலைக்கு விஜயம்!



யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி யாழ் சிறைச்சாலை அத்தியட்சகரின் அழைப்பில் வைத்தியர்கள் சிலருடன்சிறைச்சாலைக்குவிஜயத்தை மேற் கொண்டார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடி மையாகி தற்போது யாழ்ப்பாண சிறைச்சாலையில் புனர்வாழ்வுபெற்று வரும் கைதிகளுடன் கலந்துரையாடிய பணிப் பாளர், சிறைச்சாலையில் போதை பொருள் பாவனையை கட்டுப்படுத்திய மைக்காகவும் தற்போது சிறைச் சாலையில் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் தனது பாராட்டுக்களைத்தெரிவித்தார்.

சிறைச்சாலையிலிருந்து குறித்த கைதிகள் விடுதலை செய்யப்பட்ட பின் மீண்டும் போதைப்பொருள்களைப் பயன்படுத்தாமல் அவர்களைக்கண்காணிக்கும்பொறிமுறைமையொன்றை உருவாக்கி சமூகத்தில் அவர்களை பெறுமதியானவர்களாக மாற்றி எதிர்காலத்தில்போதைப்பொருள்பாவனையற்ற நாட்டை உருவாக்குவதற்கு தன்னால்முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்குவதாக பணிப்பாளர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண சிறைச்சாலையின்பிரதமசிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் சிறைச்சாலை ஊழியர்கள்எனப்பலர்கலந்துகொண்டனர்.

## அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள்

நேற்றுப் பதவியேற்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் விவரம்:-

பாதுகாப்பு அமைச்சர் - **ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ**
நிதி, புத்தசாசனம்,மத விவகாரம் மற்றும் கலாசார அலுவல்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் - **பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ**
தொழில் அமைச்சர் - **நிமால் சிறிபா லடி சில்வா**
கல்வியமைச்சர் - **ஜி.எல்.பீரிஸ்**
சுகாதார அமைச்சர் - **பவித்திராதேவி வன்னியாராச்சி**
வெளிவிவகார அமைச்சர் - **தினேஷ் குணவர்தன**
கடற்றொழில் அமைச்சர் - **டக்ளஸ் தேவானந்தா**
போக்குவரத்து அமைச்சர் - **காமினி லொக்குகே**
வர்த்தக அமைச்சர் - **பந்துல குண வர்தன**
வனஜீவராசிகள் - **சி.பி.ரட்நாயக்க**
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் - **ஜனக்க பண்டார தென்னகோன்**
வெகுஜன ஊடக அமைச்சர் - **கெஹலியரம்புக்வெல்ல**
நீர்பாசனத்துறை அமைச்சர் - **சமல் ராஜபக்ஷ**
மின்சக்தி அமைச்சர் - **டலஸ் அழகப் பெரும**
நெடுஞ்சாலைகள் அமைச்சர் - **ஜோன்ஸ்டன் பெர்னான்டோ**
கைத்தொழில் அமைச்சர் - **விமல் வீரசன்ஸ**
சுற்றாடல் துறை அமைச்சர் - **மஹிந்த அமரவீர**
காணி அமைச்சர் - **எஸ்.எம்.சந்திர சேன**
கமத்தொழில்அமைச்சர் - **மஹிந்தானந்தஅளுத்கமகே**
நீர்வழங்கல் துறை அமைச்சர் - **வாசு தேவ நாணயக்கார**
வலுசக்தி அமைச்சர் - **உதய பிரபாத் கம்பன்பில**
பெருந்தோட்டத்துறை அமைச்சர் - **ரமேஷ் பத்திரண**
சுற்றுலாத்துறை அமைச்சர் - **பிர சன்ன ரணதுங்க**
துறைமுகங்கள், கப்பல்துறை அமைச் சர் - **ரோஹித அபேகுணவர்தன**
இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் - **நாமல் ராஜபக்ஷ**
நீதியமைச்சர் - **அலி சப்ரி**

காலைக்கதிர் Kalaikkathir

கம்பவாரிதி இலங்கை.ஜெயராஜ்

# ‘அனைவர்க்கும் தாழ்வு’

உருக்குலைந்து போய்விட்டது நம் தமிழ்த்தேசியம்.
நடந்துமுடிந்த தேர்தல் நம் தலைவர்களின் பொய்மையை மட்டுமல்லாமல்,
நம்மக்களது பொய்மையையும் தெளிவாய் வெளிப்படுத்தியிருக்கிறது.
நமது தேசியத்திலும் இன உரிமையிலும் அளவுக்கதிகமான பற்று வைத்திருப்பவர்கள்போல,
நடித்துக் கொண்டிருந்த நம் மக்களின் பொய்மை முகத்தை,
தேர்தல் முடிவுகள் அசிங்கமாய் நிதர்சனப்படுத்தியிருக்கின்றன.
பதவித் தேவைக்காக எந்த அற வரையறைகளையும் தகர்க்கத் தயாராய் இருக்கிறோம் என,






நம்தலைவர்கள் தமது சுயரூபத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.
நம்மண்ணின் உரிமைக்காக உயிர் துறந்த தலைவர்கள்,
போராளிகள், பொதுமக்கள் என,
அத்தனைபேரது ஆன்மாக்களும் நிம்மதி இழந்து, 'பேயாய்'
அலையப்போகின்றன.
இந்த மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தம் வாழ்வை இழந்த,
அத்தனைபேரும் இழிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.
ஏதாவது அதிசயம் நிகழ்ந்தாலே ஒழிய, ‘தொலையப் போகிறது நம் இனம்’ என,
நான் முன் எழுதியது நடந்துவிடும் போலத்தான் இருக்கிறது.

* * *

போர் நடந்தபோதும் சரி, போர் முடிந்த பின்பும் சரி,
இன உரிமையில் அத்தனை பற்று வைத்திருப்பவர்களாய்,
நம் மக்கள் அற்புதமாய் நடித்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.
‘ஆயுதப் போராட்டத்தை ஏற்கிறீர்களா?’ என்று கேட்கப்பட்ட கேள்விக்கு,
‘இல்லை’ என்று பதில் சொன்ன சுமந்திரனை, தேசப்பிரதிஷ்டை செய்கிற அளவுக்கு,
கொதித்துக் கொந்தளித்தார்கள் நம் மக்கள்.- கொந்தளிக்கச் செய்தார்கள் நம் தலைவர்கள்.
அவர்கள் கொந்தளித்த கொந்தளிப்பைப் பார்த்தபோது,
‘ஆஹா! போராளிகள் இறந்துபோய் போராட்டம் அடக்கப்பட்டால் என்ன?
இந்த தலைவர்களினதும் மக்களினதும் உணர்ச்சியைப் பார்த்தால்,
நாளை ஈழம் மலரப்போவது உறுதி’ என்று எண்ணத் தோன்றியது.
எல்லாம் தேர்தல் முடிவு வரும்வரைதான்.
சிவாஜிக்கு 'நடிகர்திலகம்' என்று பட்டம் கொடுத்தவன் முட்டாள்.
அவரைவிட பன்மடங்கு சிறந்த நடிகர் திலகங்கள்,
நம் மண்ணில் அல்லவா உலாவி வந்திருக்கிறார்கள்.
ஏன் இத்தனை சலிப்பு என்கிறீர்களா? – ஒவ்வொன்றாய்ச் சொல்லுகிறேன்.

* * *

போராளிகளையும் போராட்டத்தையும் பொதுமக்களையும்,
கொன்றொழித்தவர்கள் என்று இதுவரை நாம் கைகாட்டி நின்ற,
‘மஹிந்த’ அணியினரின் கூட்டான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில்,
இம்முறை தேர்தலில் போட்டியிட்ட ‘அங்கஜன்’ பெருவெற்றி அடைந்திருக்கிறார்.
வெற்றி என்றால் சாதாரண வெற்றியா?,
யாழ் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட அத்தனை பேரிலும்,
அதிகூடிய விருப்பு வாக்குகள் பெற்று சாதனையே புரிந்திருக்கிறார்.
36,300 வாக்குகள் அவருக்குக் கிடைத்திருக்கின்றன.
அவரது அணிக்கு மொத்தமாக கிடைத்திருக்கும் வாக்குகள் 49,373.
பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையையும் உள்ளடக்கிய,
உடுப்பிட்டித் தொகுதியிலும் கூட அவருக்குத்தான் அதிகம் வாக்குகள் கிடைத்திருப்பதுதான்,
கொடுமையிலும் கொடுமை!

* * *

அன்றுதொட்டு இன்றுவரை போராட்டத்திலிருந்து விலகி நடந்தும்,
தனித்து நின்று புலிகளை எதிர்த்தும்,
பேரின அரசுகளோடு இணைந்து இயங்கியும் வந்த,
‘டக்ளஸ் தேவானந்தா’ அவர்களுக்கும்,
இம்முறை இரண்டு 'சீற்றுகள்' கிடைத்திருக்கின்றன.
யாழில் அவர் பெற்ற விருப்பு வாக்குகளின் தொகை 32,156.
யாழில் அவரது அணி பெற்ற வாக்குகளின் மொத்தத் தொகை 45,797.
அவரது அணி வன்னி மாவட்டத்தில் பெற்றிருக்கும் மொத்த வாக்குகள் 11,310.
மொத்தத்தில் வடமாகாணத்தில் டக்ளஸ் அணி பெற்ற மொத்த வாக்குகளின் தொகை 57,107.
இதுவரை, காட்டிக் கொடுத்தவர் என்று சில தலைவர்களாலும்,
குறிப்பிட்ட ஒருதொகை மக்களாலும் பழி சுமத்தப்பட்டு வந்த அவரது வெற்றியும்,
தமிழர்களின் இன்றைய நிலைபற்றி சிந்திக்க வைத்திருக்கிறது.

* * *

மொத்தத்தில் அவ்விருவர் பற்றி இதுவரை பதிவாகியிருந்த கருத்துக்களை உட்படுத்திப் பார்த்தால்,
போராட்டத்தை அழித்ததாயும், போராட்டத்தை எதிர்த்ததாயும் சொல்லப்பட்ட அணிகளுக்கு,
இம்முறை நம் மக்கள் மனமகிழ்வோடு மூன்று சீற்றுகளையும்,
1,06,480 வாக்குகளையும் அள்ளி வழங்கியிருக்கிறார்கள்.
இந்த முடிவுகளின் அடிப்படையில் நமக்குக் கிடைக்கும் உண்மை என்ன? என்று,
ஆராய வேண்டி இருக்கிறது.

* * *

மக்களுக்குப் பணம், பதவி, சலுகைகள் போன்ற இன்ன பிற உபகாரங்கள் வழங்கப்பட்டதே,
இவர்களின் வெற்றிக்குக் காரணம் எனப் பரவலாய்ப் பேசப்படுகிறது.
இதிலிருந்து நம்மக்களில் பெருமளவிலானோர் உரிமை அரசியலைத் துறந்து,
சலுகை அரசியலே இனி நமக்குத் தேவை என,
வெளிப்படையாய்ச் சொல்லிவிட்டது தெளிவாய்த் தெரிய வந்திருக்கிறது.
இந்தத் தேர்தலில் சலுகை அரசியலுக்கான பாதை திறந்திருக்கிறது.
அடுத்தடுத்த தேர்தல்களில் அங்கஜன் போன்றோரின் பயணம்,
மிகச் சுலபமாயும், விரிவாயும் நடக்கப்போவது உறுதி.
ஒருவரைப் பார்த்து ஒருவராய் அந்தப் பாதையில்,
இனி நம் மக்கள் குவிந்து நடைபோடப் போகிறார்கள்.
இன உரிமையாவது, சுதந்திரமாவது, இனி ஒரு மண்ணும் இருக்கப்போவதில்லை.
‘ஆயுதப் போராட்டத்தை நிராகரிக்கிறேன்’ என்று சுமந்திரன் சொன்னதற்காக,
கொதித்தெழுந்த மக்களின் நடிப்பு மிகத் தெளிவாய்த் தெரியவந்துவிட்டது.
‘உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்’ தொகை,
நம் மண்ணில் கூடிக்கொண்டே போகிறது என்பதையே இது உணர்த்துகிறது.

* * *

இனி, தலைவர்களின் நடிப்பை ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்.
பெரும்பான்மை பற்றி, முதலில் கூட்டமைப்பை எடுத்துக் கொள்ளலாம்.
கட்டப்பொம்மனாய் வந்து எட்டப்பனாய் மாறிய நீதியரசரும்,
அவருக்கு வால் முறுக்குவோருமாக எதிரணியில் ஒரு கூட்டமும்.
முன்னாள் முதலமைச்சரால் ஒரு காலத்தில் சிபாரிசு செய்யப்பட்டு,
இத்தேர்தலில் அவரால் கைவிடப்பட்ட கஜேந்திரிகுமார் தலைமையிலான இன்னொரு கூட்டமுமாக,
இதுவரை நடந்த தேர்தல்களில் இல்லாதவகையில் எதிரணி பலம் பெற்றிருக்க,
அதை உணராமல் கூட்டமைப்புத் தலைவர்கள் சிலர் நடந்து கொண்ட முறை அநாகரிகத்தின் உச்சம்!
அரசியல் அரிச்சுவடியும் தெரியாத இழிவின் எல்லை என்றும் அதனைச் சொல்லலாம்.

* * *

சிறீதரன் போன்ற ஒருசிலரைத் தவிர,
கூட்டணித்தலைவர்கள் பலரதும் கையிலிருந்த அம்புகள்,
எதிராளித் தலைவர்களை விட்டுவிட்டு சுமந்திரனின் மார்பைக் குறிவைத்தபடியே இருந்தன.
அண்மையில் வெளிவந்த சுமந்திரனின் பேட்டியை வைத்து,
வெளிப்படத் தொடங்கிய அவர்களது உட்பகை,
தேர்தல் முடிந்த இன்றைய நிலையிலும் ஓய்ந்த பாடில்லை.
உலகமே கைகொட்டிச் சிரிக்கிறது!

* * *

அறிவாற்றல் மிக்க, காரியங்களை முன்னெடுக்கக் கூடிய, ஆளுமைமிக்க,
சுமந்திரனின் தகுதிப்பாடுகள்தான் இவர்களது பகையின் காரணங்கள்.
சுமந்திரனும், ஆரம்பகாலத்தில் சம்பந்தன் ஐயாவின் சலுகைகளை நம்பி,
இணைந்திருந்த மற்றைய அணியினரின் பகையைளச் சம்பாதித்துக் கொண்டதும்,




மறுக்கமுடியாத உண்மையாம்.
ஆனாலும், இன்றைய நிலையில் தமது கட்சிக்கும் இனத்திற்கும்; அவசியமாய்த் தேவைப்படும்,
சுமந்திரனது பங்களிப்பை, தமது பகை நோக்கியும் பதவி ஆசை நோக்கியும் நிராகரிக்க முற்பட்ட,
கூட்டமைப்புத் தலைவர்களின் செயற்பாடுகள், முட்டாள்த் தனத்தின் எல்லை தொட்டன.
பொது எதிரிகள் பலம் பெற்றாற்போல் மோதவர, அதுபற்றிய எந்தக் கவலையுமே இல்லாமல்,
தமக்குள் தாம், வெளிப்படையாக உட்பகை வளர்த்து நின்ற இவர்தம் செயல்கள்,
இனப்பற்றில்லா இவர்களின் இழிவை வெளிப்படுத்தின.

* * *

கூட்டமைப்பைச் சார்ந்த ரெலோ அமைப்பின் தலைவரான,
அடைக்கலநாதன் அவர்கள் ஒரு தேர்தல் கூட்டத்தில்,
‘சுமந்திரனைத் தொலைக்கவேண்டுமானால் இன்னதைச் செய்யுங்கள்’ என,
பேசியபேச்சு முகநூலில் காணொளியாய் வெளிவந்ததைக் காணமுடிந்தது.
மாற்றணியினர்களை மதிக்காத சுமந்திரனின் பழைய பகை அவர் நெஞ்சில்.
ஊடகப் போராளியாய்த் தன்னை வெளிப்படுத்தும்,
ஊடக முதலாளியான சரவணபவன் அவர்கள் தனது ‘உதயன்’ பத்திரிகை ஊடாக,
சுமந்திரனுக்கு எதிராக என்னென்ன செய்யமுடியுமோ அத்தனையும் செய்து தோற்றார்.
தோற்றது சுமந்திரனுக்கு எதிரான அவர் முயற்சிகளில் மட்டுமல்ல தேர்தலிலும்தான்.
இம்முறை தனக்கு 'சீற்' வழங்கக்கூடாது என்று சுமந்திரன் முன்மொழிந்ததால் வந்த கடுப்பு அவருக்கு.
இவர்கள் அளவு வெளிப்படையாய் இல்லாவிட்டாலும்,
தமிழரசுக்கட்சியின் தலைவரான மாவை அவர்களும் சுமந்திரன் எதிர்ப்பில் பங்குபற்றியது நிதர்சனம்.
அவருக்கு, தான் பரம்பரை ஆட்சி செய்ய சுமந்திரன் தடையாய் இருப்பதில் ஏற்பட்ட எரிச்சல்.

* * *

சுமந்தினுக்கு சார்பாய் சிறீதரன் பேச முற்பட,
அவரது மார்பும் உட்பகையாளிகளின் அம்புகளால் குறி வைக்கப்பட்டது.

’புல்லரெலாம் ஒன்றுபட்;டால் சூது நடக்கும்’ என்று எங்கோ ஒருபாடலைக் கேட்டதாய் ஞாபகம்.
இம்முறைத் தேர்தலில் கூட்டமைப்பில் அது பட்டவர்த்தனமாய் நடந்தது.
இவர்தம் அறியாமை அசிங்கங்களின் உச்சமாய் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் எதிராக,
துண்டுப் பிரசுரங்கள் கூட அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டதாம்.
எதிராளிகளின் படை எதிரில் நிற்க,
உலகறிய தமக்குள் மோதிக்கொண்ட இவர்தம் மூடத்தனத்தை,
உலகில் வேறெங்கும் காணமுடியுமா? தெரியவில்லை!

* * *




# ‘அனைவர்க்கும் தாழ்வு’

‘சூத்தைக்’ கத்தரிக்காயின் பழுதடைந்த பகுதியை வெட்டி எறிந்துவிட்டு,
மிகுதியைப் பயன்படுத்தவேண்டும் என்றும்,
மரத்தில், குருவிச்சை பிடித்தால் அதனை வெட்டி எறிந்துவிட்டு,
மரத்தைக் காக்கவேண்டும் என்றும் சரவணபவன் பகிரங்கமாய்ப் பேசிய செய்தியை,
தேர்தலின் பின்னான தனது பத்திரிகையாளர் சந்திப்பில்,
சுமந்திரன் வெளிப்படையாய் எடுத்துச் சொன்னார்.
கத்தரிக்காயின் ‘சூத்தைப்’ பகுதி எது? என்றும் குருவிச்சை எது? என்றும்,
தெரிந்துவிட்ட காரணத்தால்த்தான் இத்தேர்தலில் சரவணபவனை,
மக்;கள் தோற்கடித்தார்கள் என்று கிண்டலடித்து,
தனது பகையை சுமந்திரனும் பகிரங்கமாய் வெளிப்படுத்தினார்.
இன்றைய சூழலில் தமது உட்பகையை ஊடகங்கள் முன்னிலையில்,
அவர் வெளியிட்டதும் தவறேயாம்!

* * *

இம்முறை தேர்தலில் சுமந்திரனுக்கு எதிரணியில் நின்று செயற்பட்டவர்கள்,
வரையறையின்றிப் பலராய் விரிந்தனர்.






முன்னாள் முதலமைச்சரும் அவர் குழுவினரும்
கஜேந்திரகுமாரும் அவர் குழுவினரும்
மாவை சேனாதிராஜாவும் அவர் குழுவினரும்
அடைக்கலநாதனும் அவர் குழுவினரும்
சரவணபவனும் அவர் குழுவினரும்
சுமந்திரனால் அழைத்துவரப்பட்டு அவருக்கு எதிராய்ச் செயற்பட்ட முன்னாள் மேயர் ஆர்னோல்ட் அவர்களும்
அச்சு ஊடகங்களில் உதயன், வலம்புரி, தினக்குரல் போன்ற சில பத்திரிகைகள்.
சக்தி, டான் ரி.வி. ஐ.பி,சி போன்ற சில தொலைக்காட்சிகள்.
முகம் தெரியாத முகநூல் போராளிகள் சிலர்.
புலம்பெயர் நாடுகளிலிருந்து செயற்பட்ட குழுக்கள் சில. என,
இத்தனை பேரும் சுமந்திரனுக்கு எதிராய் ஒருமித்து வசைபாட,
பொதுமக்கள் மனங்களிலும் தடுமாற்றம் ஏற்படத் தொடங்கியது மறுக்கமுடியாத உண்மையேயாம்.
இங்ஙனமாய் பெரும்படையே சுமந்திரனை வீழ்த்துவதில் முனைந்து போராட்டியது.
இத்தகைய எதிர்ப்புக்கள் வேறு எந்த வேட்பாளருக்கும் ஒருக்காலும் இருக்கவில்லை.
இத்தனை எதிர்ப்புகளையும் முறியடித்து சுமந்திரன் பெற்ற வெற்றி என்பது,
நிச்சயம் ஒரு சாதனைதான்! என்பதில் ஐயமில்லை.
ஒருமித்த இவ் எதிர்ப்புக்கள் இல்லாதிருந்திருந்தால்,
சுமந்திரன், முன்பு தான் ஒரு பேட்டியில் சொன்னாற்போல,
ஒரு இலட்சம் வாக்குகளைப் பெற்றிருப்பார் என்றுதான் தோன்றுகிறது.

* * *

சுமந்திரனையும் சிறீதரனையும் வீழ்த்தவென கூட்டமைப்புக்குள் முனைந்த பலர்,
இம்முறைத் தேர்தலில் தாம் தோற்றுப்போயினர்.
இத்தனை எதிர்ப்புக்களையும் ஒருமித்துப் பெற்ற சிறீதரன்,
35,884 விருப்பு வாக்குகளைப் பெற்று வாக்குத்தேர்வில் முதலாம் இடத்தையும்,
சுமந்திரன் 27,734 விருப்பு வாக்குகளைப் பெற்று வாக்குத்தேர்வில் இரண்டாம் இடத்தையும் பெற்றது,
எதிரிகள் அத்தனைபேர் முகத்திலும் கரியைப் பூச வைத்தது.

* * *

இதில் வேடிக்கை என்னவென்றால்,
இத்தனை அசிங்கங்களும் கட்சிக்குள் நடந்துகொண்டிருக்க,
‘முத்தர் மனம் இருக்கும் மோனத்தே’ என்றாற் போல,
கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் இவை எதுவுமே தெரியாதவராய்,
தேர்தல் பிரச்சாரத்தில் திடீரென வந்த உற்சாகத்தால்,
பேரினவாதக் கட்சியினருக்கு சாட்டை அடி கொடுத்துக் கொண்டிருந்தார்.
வெளிக்கட்சிகளை நோக்கி வீசப்பட்ட அவரது சாட்டையால்,
உட்கட்சிக்குள் ஒன்றும் செய்ய முடியவில்லை.
இருபத்திரண்டு பதிநான்காகி பதினாறாகி பத்தாகியதற்கு அடிப்படைக் காரணம்,
சம்பந்தரின் இந்த ஆண்மையற்ற மௌனமேயாம்.
இனியேனும் அவர் மௌனம் கலைந்து துணிவு பெறுவாரா? என,
தமிழினம் எதிர்பார்த்துக் காத்து நிற்கிறது.

* * *

‘புலி வருகிறது’, ‘பூதம் வருகிறது’ எனும் அறிவித்தல்களால் மட்டும்,
மக்கள் மத்தியில் அதிரடி செய்துகொண்டிருந்த,
முன்னாள் முதலமைச்சரின் அணி பற்றி அடுத்து பார்க்கவேண்டும்.
உண்மையில் அவரை ஒரு அதிஷ்டசாலி என்றுதான் சொல்லவேண்டும்.
வஞ்சனை, திறமையின்மை, நடுவுநிலைமையின்மை, உண்மையின்மை என,
பல குறைபாடுகளைக் கொண்டிருந்தும் தன் தோற்றத்தால் மட்டும்,
மக்கள் மனதில் நல்லவர் இவர் எனும் ஓர் அபிப்பிராயத்தை அவர் உருவாக்கியிருந்தார்.
‘வெள்ளையாய் இருப்பவன் பொய் சொல்லமாட்டான்’ எனும் கதைதான் அது.
தேர்தலுக்கு முன்பாக ’கேள்விக்கு என்ன பதில்’ எனும் தலைப்பில்,
‘உகரத்தில்’ நான் கேட்டிருந்த 23 கேள்விகளில்,
ஒன்றுக்குக் கூட முதலமைச்சரோ, அவரது ஆதரவாளர்ளோ பதில் சொல்ல முன்வரவில்லை.
இந்த இலட்சணத்தில் அறநெறியின் வேலிகளை நான் தகர்த்துவிட்டதாய்,
‘வலம்புரி’ பத்திரிகையில் அதன் ஆசிரியர் என் மீது கண்டனக்கணை தொடுத்திருக்கிறார்.
அவரை நினைக்கப் பரிதாபமாக இருக்கிறது.
தான் செய்துவரும் காரியத்தை நான் செய்வதாய் எழுதி,
பொய்மையைப் புடமிடும் அவர் அறியாமையை என் சொல்ல?
ஒரு காலத்தில் ’உதயன்’ பத்திரிகை நடுநிலை தவறிச் செயற்படுவதாய்,
ஒப்பாரி வைத்து வந்த இவர், இன்று அதே காரியத்தைத் தானும் செய்து,
பத்திரிகாதர்மத்தை மட்டுமல்லாமல் பொது தர்மத்தையும் மீறிச் செயற்படுகிறார்.
தன் மைத்துனருக்கு முன்னாள் முதலமைச்சரின் கட்சியில் சீற் வாங்கிக் கொடுத்த நன்றிக்கடன் அது.
‘நக்கினார் நாவிழந்தார்’ என்பது இதனைத்தான் போலும்.
என்றோ ஒருநாள் இவர்கள் காலத்துக்கும் இனத்திற்கும் பதில் சொல்லவேண்டி வரும்.

* * *

புலம்பெயர் தமிழர்களிடமும் ஊர் மக்களிடமும் இரந்து கேட்டுப் பெற்றுக் கொண்ட பணத்தால்,
இம்முறை முதலமைச்சரின் தேர்தல் விளம்பரங்கள் களைகட்டின.
யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் மட்டுமல்லாது கொழும்புப் பத்திரிகைகளிலும்,
கால்ப்பக்கம், அரைப்பக்கம், முழுப்பக்கம் என வந்த விளம்பரங்களைக் கண்டு,
தன் வெற்றி நிச்சயம் என நினைந்த முன்னாள் முதலமைச்சர்,
திருகோணமலையில் சம்பந்தன் ஐயா இளைஞனான ரூபனுக்கு,
விட்டுக்கொடுத்து ஓயவேண்டும் என்று அறிக்கை விட,
இவ் இளைஞரின் உற்சாகம் கண்டு ஊரே சிரித்தது.

* * *

தேர்தலின் பின்னான பேட்டி ஒன்றில், தான் எந்தெந்த இடங்களில்,
எத்தனை எத்தனை சீற்றுகளை எதிர்பார்த்தேன் என்று வெளிப்படையாய்ச் சொல்லி,
தன் மனக்கவலையை விக்னேஸ்வரன் அவர்கள் வெளியிட்டிருந்தார்.
பாவம் அவருக்குப் பெரிய அதிர்ச்சிதான்.
பத்திரிகைகளின் ஆதரவு, பிறகட்சிகளின் ஆதரவு, இணைய ஊடகங்களின் ஆதரவு என,
சுமந்திரனுக்கு இருந்த எதிர்ப்பின் அளவான ஆதரவைப் பெற்றும்,
அவரால் மக்கள் மனதை வெல்லமுடியவில்லை என்பது வெளிப்படையாயிற்று.
இத்தனை முயற்சிகளுக்குப் பின் அவருக்கிடைத்திருக்கிற மொத்த வாக்குகள் 21,554தான்.
அவற்றைக் கூட அவரது தனி ஆதரவு வாக்குகள் என நிச்சயம் சொல்லமுடியாது.
இம்முறை தென்மராட்சியில் பலர் அருந்தவபாலனை வெற்றி பெறவைக்க படாதபாடு பட்டனர்.
பதவிக்காக கட்சி மாறிய அருந்தவபாலனும் இரத்தபாசம் பொங்குபவர் போல்,
முதலமைச்சரின் நிழலாய்த் திரிந்து செய்த முயற்சியின் பயனாக 12,674 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.
அவரை ஆதரித்த அனைவருமே அவருக்காக நீதியரசருக்கு வாக்களித்தது மறுக்க முடியாத உண்மை.
அதுபோலவே மு. முதலமைச்சரின் கட்சியில் அணிசேர்ந்திருந்த பிரபல வேட்பாளர்களான,
சுரேஷ் பிரேமச்சந்திரன் (7756), சிவாஜிலிங்கம் (10121), அனந்தி (9193) போன்றோரும்,
தமது ஆதரவாளர்களைக் கொண்டு முதலமைச்சருக்கும் வாக்கிட வைத்திருந்தனர்.
மேற் சொன்னோரது ஆதரவு வாக்குளை நீக்கிப் பார்த்தால்,
முதலமைச்சரின் தனிப்பட்ட ஆதரவு வாக்குகளின் சிறுமையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

* * *

எப்படியோ பலரது முதுகுகளிலும் கால் வைத்து தனி ஒருவராகக் கப்பலில் ஏறியிருக்கிறார் முதலமைச்சர்.
‘முதலமைச்சர், தேர்தலில் தோற்றால் வென்றுவிடுவார்’ ’வென்றால் தோற்றுவிடுவார்’ என,
தேர்தலின் முன் என் நண்பர்களிடம் சொல்லியிருந்தேன்.
பாவம் அவருக்கு விதி துணைபுரியாததால் வென்றுவிட்டார்.
இனித்தான் அவரது கஷ்டகாலம் தொடங்கப்போகிறது.
இதுவரை மக்களை ஈர்க்கவேண்டும் என்பதற்காய் சர்வஜன வாக்கெடுப்புப் போன்ற,
நடைமுறைக்குச் சாத்தியமில்லாத பலவற்றைச் சொல்லி வந்த இவர்,
இனி, பாராளுமன்றத்தில் அதைச் சாத்தியப்படுத்திக் காட்டவேண்டும்.
மாகாணசபையில் தமிழ் உறுப்பினர்களுக்கு மத்தியில் விட்ட ’விடுகைகளை’,
பாராளுமன்றத்தினுள் சிங்கள உறுப்பினர்களுக்கு மத்தியில் எப்படி விடப்போகிறார் என்பதுதான் கேள்வி.
பாவம், கஜேந்திரகுமாரோ, டக்ளஸோ, அங்கஜனோ இவருக்குத் துணை செய்யப்போவதில்லை.

**(10 ஆம் பக்கம் பார்க்க...)**

# புதிய அரசின் அமைச்சரவை பதவிப் பிரமாணம்

**பிரதமர் உட்பட அமைச்சரவை அமைச்சர்கள் 25 பேர்**
**இராஜாங்க அமைச்சர்கள் 39 பேர்**
**மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் 23 பேர்**

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசின் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

பதவிப் பிரமாண நிகழ்வு கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகுல்மடுவ மண்டபத்தில் நடைபெற்றது.

சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணித்த செயற்திறன் வாய்ந்த அமைச்சரவை ஒன்றின் தேவை குறித்து ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடைமுறை சாத்தியமானதும் யதார்த்தமானதுமான அமைச்சரவையின் எண்ணிக்கை திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சு கட்டமைப்பை அமைப்பதில் தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் பிரதமர் உட்பட 25 பேர் அங்கம் வகிக்கின்றனர். இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 39 ஆகும். மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர்களாக 23 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து புதிய அமைச்சரவை மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை ஆசிர்வதித்தனர்.

மாவட்டக் குழுத் தலைவர்களுக்கான நியமனப் பத்திரம் ஜனாதிபதியால் முதலில் வழங்கி வைக்கப்பட்டன.

# ஐ.தே.கவின் தலைவராக கரு; பொதுச்செயலாளராக மங்கள?

கொழும்பு, ஓக 12

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான சபாநாயகர் கருஜயசூரியவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



அத்துடன், பொதுச் செயலாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என சிறிகொத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியில் பதவிகளை ஏற்பது தொடர்பில் இவ்விருவரும் இன்னும் தமது நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது. இதன்போதும் இது பற்றி கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இந்தியத் தூதுவருடன் மனோ அணி சந்திப்பு

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேக்கும் இடையிலான சந்திப்பு இன்று கொழும்பு 7இல் அமைந்துள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஸ்ணன், உப தலைவர்களான எம்.வேலுகுமார், அ.அரவிந்குமார், எம்.உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

பிரதி இந்தியத் தூதுவர் வினோத் ஜெகப், அரசியல் துறைப் பொறுப்பாளர் கவுன்சிலர் திருமதி பானுபிரகாஸ் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மலையகத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் உட்பட சமகால விவகாரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.



## மைத்திரி, எஸ்.பி., சுசில், விஜயதாஸ உட்பட

# அரசின் முக்கிய புள்ளிகளுக்கு அமைச்சுப் பதவிகள் இல்லை!

கொழும்பு, ஓக 12

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசின் அமைச்சரவையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சுப் பதவி எதுவும் வழங்கப்படவில்லை.

பொலனறுவை மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற மைத்திரிபால, தமக்கு மகாவலி அமைச்சு வழங்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை அதிருப்தியடைய வைத்துள்ளது. அவருக்கு சபாநாயகர் பதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோருக்கும் அமைச்சரவையில் இடம் வழங்கப்படவில்லை.

மஹிந்த ஆட்சியிலும் நல்லாட்சியிலும் அமைச்சுப் பதவிகளை வகித்த சுசில் பிரேமஜயந்த, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, டிலான் பெரேரா, மஹிந்த சமரசிங்க மற்றும் அநுர பிரியதர்ன யாப்பா ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

'மொட்டு' கட்சியில் கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் ஓரங் கட்டப்பட்டுள்ளார்.

சந்திம வீரக்கொடிக்கு அமைச்சுப் பதவி கிடைக்காத போதிலும் அவர் பிரதி சபாநாயகராக நியமிக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அமைச்சரவையில் ஒரேயொரு முஸ்லிம்

**ராஜாங்க அமைச்சர்களில் எவருமில்லை**

கொழும்பு, ஓக 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று புதன்கிழமை பதவியேற்ற புதிய அமைச்சரவையில் ஒரேயொரு முஸ்லிம் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கு நீதி அமைச்சு கிடைத்துள்ளது.

ராஜாங்க அமைச்சராக முஸ்லிம்கள் எவரும் நியமிக்கப்படவில்லை

மாவட்ட இணைப்புக்குழுத் தலைவராக, ஒரு முஸ்லிம் - அதாவது மஸ்தான் நியமனமாகியுள்ளார். அவர் மன்னார், முல்லைத்தீவு இணைப்புக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மொட்டுவின் புதிய அமைச்சரவையில் 5 ராஜபக்ஷக்களுக்கு அமைச்சுப் பதவி!

கொழும்பு, ஓக 12

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசின் அமைச்சரவையில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் அமைச்சர்களாக இன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சராகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதி, புத்த சாசனம், மத விவகாரம் மற்றும் கலாசார அலுவல்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

சமல் ராஜபக்ஷ நீர்ப்பாசனத்துறை அமைச்சராகவும், உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் இராஜாங்க அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன் இளம் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ முதல் தடவையாக அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற சஷீந்திர ராஜபக்ஷ நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழிநுட்ப விவசாயத்துறை இராஜாங்க அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.



**நிரந்தர வேலைவாய்ப்பு**

வட பகுதியில் இயங்கி வரும் எமது முன்னணி நிறுவனமான **NFlash Super Detergent** புதிய கிளைகளுக்கான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கான புதிய நபர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகத் தேர்வு 10முதல் **A/L** வரை மூன்று மாத பயிற்சியின் போது 15000 வருமானம் பயிற்சியின் பின் 40000/= மேல் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

மேலதிக சேவைகள் - **EPF, ETF, Medical,** ஆங்கிலம் சிங்களம் கற்பதற்கான வசதி பதவி வெற்றிடங்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு - 021 222 2855, 077 552 1636

# தமிழரசு தேசிய பட்டியல் நியமனத்துக்கு சம்பந்தனை நாடுவதில் அர்த்தமேயில்லை

## கட்சியின் மத்திய குழுவில் சம்பந்தன் இல்லை என்கின்றார் வீ.எஸ்.சிவகரன்

**(தலைமன்னார் நிருபர்: வாஸ் கூஞ்ஞ)**

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் சம்பந்தன் இல்லாத பொழுது ஏன் தமிழரசுக் கட்சியின் தேசிய பட்டியல் தெரிவுக்கு சம்பந்தனைத் தமிழரசுக் கட்சியினர் நாட வேண்டும் என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் தமிழரசு கட்சியின் இளைஞர் அணியின் தலைவருமான வீ.எஸ்.சிவகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கையில் –

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் தரப்புக்கு பல்வேறு படிப்பினையை கற்பித்திருக்கின்றது. ஒற்றுமையின்மை எவ்வாறன விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்திருப்பார்கள்.

இந்த அரசு பெரும்பான்மையோடு ஆட்சி பீடம் ஏறியிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் தரப்புகள் தொடர்ந்து பிரிந்து நின்றால் எவ்வாறன விளைவுகளை அவர்கள் எதிர்நோக்கப் போகின்றார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்களுடைய முரண்பாடுகள் தமிழ் மக்களின் இருப்புகளுக்கு எவ்வாறு ஆபத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

2015 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பின் இணக்க அரசியலே இவ்வாறான நிலையை உருவாக்கி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுதந்திரக் கட்சியும் வன்னியில் ஐக்கிய மக்கள் சக்தியும் மட்டக்களப்பில் பிள்ளையானும் தெரிவு செய்யப்பட்டமை வருந்தக்கூடியதாகும்.

இவ்வாறான நிலமைகள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரை இடம்பெற்ற ஏழு தேர்தல்களில் இவ்வாறு இருக்கவில்லை

தமிழ் மக்கள் பல சலுகைகளை பெற்றுக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் தமிழ் தேசியத்துக்கும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்

2015 ஆட்சி மாற்றத்திற்கு பின்பு இணக்க அரசியலே இவ்வாறான செயல்பாட்டை நெறிப்படுத்தியிருந்தது. இந்த நிலையில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்னும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை.

இவர்கள் இன்னும் தங்களுக்குள்ளே போட்டா போட்டியிலேயே இருந்து வருகின்றனர். அத்துடன் மாற்று அணியும் வலுவாக அமையவில்லை. மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்திருந்தால் ஒன்று விக்னேஸ்வரன் கூட்டுக்கோ அல்லது கஜேந்திரன் கூட்டுக்கோ வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை.

அபிவிருத்திக்கும் இணக்க அரசியலுக்குமே தமிழ் மக்கள் சென்றுள்ளமை வேதனையே. இந்த நிலையில் மாற்றம் ஏற்படுத்தாவிடில் அரசு தமிழ் மக்களை இலகுவாக தன் பக்கம் ஈர்க்கக்கூடியதாக இருக்கும்.

ஆகவே அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுவிட்டது

இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களில் வடக்கு, கிழக்கில் வல்லமை பொருந்திவர்களோ அல்லது சக்தி கொண்டவர்களோ அல்லது அறிவு பூர்வமாக உரையாடக்கூடியவர்களோ, இராஜீக ரீதியாக உரையாடக்கூடியவர்களோ பெருவாரியாக இல்லை.

ஜனநாயகம் என்பது ஒரு கேலி கூத்தாக, ஜனநாயகம் என்பது ஒரு கும்பலின் ஆட்சி என்ற லெனின் கூற்றையும் அரசியல் என்பது அயோக்கியனின் கடைசி புகலிடம் என்பதையும் நிரூபிப்பதான நிலமை. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களையும், சிறையில் இருப்பவர்களையும், போதைப் பொருள் வியாபாரிகளையும் இந்த நாடாளுமன்றுக்கு மக்கள் தெரிவு செய்துள்ள துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.



மாற்று அணி என்பது அவர்கள் ஒரு வாக்கு திரட்சியை ஏற்படுத்தவில்லை. இவர்கள் வெறுமனே கூட்டமைப்புக்கு எதிரான ஒரு கோஷம் எழுப்பியவர்களாகவே இருந்தார்கள். இவர்களின் பேச்சுக்களை மக்கள் கேட்டார்கள் தவிர, மக்கள் ரசிக்கவில்லை. ஆகவே இனிமேல் அனைவரும் ஒன்றிணைவது கட்டாயத்தின் தேவையாகும்.

இதேசமயம், தமிழரசுக் கட்சிக்குள் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. சுமந்திரனும் சிறிதரனும் கட்சியைப் பகிரங்கமாக விமர்சனம் செய்யும் நிலை உருவாகியுள்ளது

இதற்கு எதிராக கட்சி நடவடிக்கை எடுக்குமா என்பதும் கேள்விக்குறியே. நாங்கள் கட்சிக்கு எதிராக பேசினோம் எனத் தான்தோன்றித்தனமாகக் கட்சியிலிருந்து நீக்கமுற்பட்டவர்கள் இக் கட்சி ஒழுக்காற்று விதி 19 இன் பிரகாரம் இவர்கள் இருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பார்களா?

மாவையின் செயல்பாட்டாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. இவர் 2014 இல் கட்சியை பொறுப்பேற்ற போது ஓர்ஆளுமை கொண்டவராக இருக்கவில்லை. மாறாக சுமந்திரனில் தங்கி வாழ்ந்ததன் விளைவே இதுவாகும். ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களை எவ்வாறு அடக்கி ஒடுக்கி அழித்ததன் விளைவை இப்பொழுது அனுபவிப்பது போன்று தமிரசு கட்சியும் அனுபவிக்கின்றது

சுமந்திரன் மற்றும் சிறிதரனும் கட்சியை பின் கதவால் கைப்பற்ற நினைப்பது ஏற்புடையதல்ல. கட்சியின் பொது குழுவில் 150 அங்கத்துவர்களும் உள்ளனர். மத்திய குழு வில் 50 அங்கத்தவர்கள் கொண்டது.

பொதுக் குழுவின் அங்கீகரம் இன்றி இவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. மத்திய குழு இருக்கத் தேசி பட்டியலை சம்பந்தனிடம் கேட்பதின் மர்மம் என்ன?

மத்திய குழுவில் தெரிவு பதவி வழியில் 22 மாவட்டத்துக்கான செயற்குழு உறுப்பினர்கள் 18 மிகுதி 10 தலைவரின் ஆலோசனையில் தெரிவு செய்யப்படுவர்.

இந்தக் குழுவில் சம்பந்தன் இல்லை. இவ்வாறு இருக்க இவர் எப்படி தமிழரசு கட்சியில் அதிகாரம் செலுத்த முடியும்?

2014 தொடக்கம் சம்பந்தன் மத்திய குழு அங்கத்துவர் அல்லர். ஆனால் அரசியல் குழுவுக்கு அவர் தலைவராக இருக்கிறார்.

தமிரசு கட்சி யாப்பின்படி 6 துணை செயலாளர்கள் மட்டுமே இருக்க முடியும். இன்றைக்கு 15 க்கு மேற்பட்ட துணை செயலாளர்கள் இருக்கின்றார்கள்.

தற்பொழுது சுமந்திரன் வகிக்கும் துணைச் செயலாளர் பதவி யாப்புக்கு முரணானது. சிவஞானம் வகிக்கும் சிரேஷ்ட துணைத் தலைவர் பதவி கூட சட்டவிரோதமானது.

ஒரு சிரேஷ்ட துணை தலைவரும் ஒரு சிரேஷ்ட பொது செயலாளரும் மட்டுமே யாப்பில் உள்ளன.

இது விடயமாக நான் மாவை சேனாதிராஜாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்தேன். இப்பொழுது அவர் அனுபவிக்கின்றார். – என்றார்.

# இராஜாங்க அமைச்சர்கள் விவரம்

நேற்றுப் பதவியேற்ற இராஜாங்க அமைச்சர்கள் விவரம்:-

உள்நாட்டு உள்ளக விவகார அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் – **சமல் ராஜபக்ஷ**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தை பல்வகைமை இராஜாங்க அமைச்சர் – **பிரியங்கர ஜயரத்ன**

சூரிய சக்தி , காற்று, நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் – **துமிந்த திசாநாயக்க**

பத்திக், கைத்தறி உற்பத்தி, உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் – தயாசிறி ஜயசேகர

கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் – **லசந்த அழகியவன்ன**

சிறைச்சாலைகள்புணரமைப்பு, சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் – **சுதர்சினி பெர்ணான்டோபுள்ளே**

தெங்கு, கித்துள், பனை உற்பத்தி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **அருந்திக்க பெர்ணான்டோ**

கிராமிய வீதிகள், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் – **நிமல் லங்சா**

காணி முகாமைத்துவ அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் – **ரொசான் ரணசிங்க**

தேயிலை ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் – **கனக ஹேரத்**

தேசிய மரபுரிமைகள், கிராமிய கலைகள் மேம் பாடு இராஜாங்க அமைச்சர் – **விதுல விக்கிரமநாயக்க**

சிறு பயிர்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **ஜானக வக்கும்புர**

பௌத்த பல்கலைக்கழகங்கள், பிரிவெனாக் கல் இராஜாங்க அமைச்சர் – **விஜித்த பேருகொட**

சமுர்த்தி, வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **கொன் சேமசிங்க**

உர உற்பத்தி, இரசாயன வளங்கள் இராஜாங்க அமைச்சர் – **மொஹான் டி சில்வா**

இரத்தினக்கல், கனிய வளங்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் – **ரொஹான் ரத்வத்த**

வாகன ஒழுங்குறுத்துகை, மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் – **திலும் அமுனுகம**

வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் – **விமரவீர திசாநாயக்க**

பிராந்திய உறவு அபிவிருத்தி நடவடிக்கை இராஜாங்க அமைச்சர் – **தாரக பாலசூரிய**

கிராமிய வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் – **இந்திக்க அநுருத்த**

மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் – **காஞ்சன விஜயசேகர**

கிராமிய மற்றும் பிரதேச நீர் கருத்திட்ட அபிவி ருத்தி இராஜாங்க அமைச்சர் – **சனத் நிசாந்த**

மகாவலி வலய கால்வாய் அபிவிருத்தி, பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்– **சிறிபால கம்லத்**

மகாணசபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் – **சரத் வீரசேகர**

கிராமிய வயல்நிலங்கள், குளங்கள், நீர்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **அநுராத ஜய ரத்ன**

தபால் சேவைகள், வெகுசன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **சதாசிவம் வியாழேந்திரன்**

கிராமிய, பாடசாலை விளையாட்டு உட்கட்ட மைப்பு வசதிகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் – **தேனுக விதானகமகே**

ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **சிசிர ஜயக்கொடி**

மகளிர், சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **பியால் நிஷாந்த டி சில்வா**

கிராமிய கைத்தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் – **பிரசன்ன ரணவீர**

விமானசேவைகள், ஏற்றுமதிவலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **டி.பி.ஜானக்க**

கால்நடை வளங்கள், பால் – **முட்டை சார்ந்த** தொழில் இராஜாங்க அமைச்சர் – **டி.பி.ஹேரத்**

நெல், தானிய வகைகள், விதை உற்பத்தி, உயர் தொழில்நுட்பம் இராஜாங்க அமைச்சர் –**சஷிந்திர ராஜபக்ஷ**

நகர அபிவிருத்தி , கரையோர பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை இராஜாங்க அமைச்சர் – **நாலக்க கொடஹேவா**

தோட்ட வீடமைப்பு சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் – **ஜீவன் தொண்டமான்**

நிதி மூலதனசந்தை, அரச தொழில் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் – **அஜித் நிவாட் கப்ரால்**

திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி இரா ஜாங்க அமைச்சர் – **சீதா அரம்பேபொல**

ஔடத உற்பத்தி இராஜாங்க அமைச்சர் – **சன்ன ஜயசுமன**

# ஹெரோயின் மற்றும் ரூ.70 லட்சத்துடன் பெண் ஒருவர் கைது

புறக்கோட்டை, பெத்தேகம பகுதியில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து சுமார் எழுபது லட்சம் ரூபா பணம் மற்றும் 800 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மீகஹவத்த பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளுக்கு பின்னர் இந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

# ‘அனைவர்க்கும் தாழ்வு’...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது உரிமைக்காக இவர் நடத்தப் போகிற சர்வஜனவாக்கெடுப்பைக் காண,
தமிழ்மக்கள் ஆவலோடு காத்திருக்கப் போகிறார்கள் என்பது மட்டும் நிச்சயம்.
இன நன்மைக்காய் இணைந்து செயற்படுவோம் என்ற,
சுமந்திரனின் கோரிக்;கையை நீதியரசர் எதிர்கொண்டிருக்கும் முறைமையே,
அவர் திருந்தப் போவதில்லை என்பதை உறுதிபட உரைக்கின்றது.

* * *

அடுத்து நாம் ஆராயவேண்டியது,
கஜேந்திரகுமார் அவர்களின் அணி பெற்றிருக்கும் வெற்றியைப் பற்றியது.
கூட்டமைப்பு, பதவி தராத கோபத்தில் அதிலிருந்து வெளியேறிய கஜேந்திரகுமார்,
மிகக் கடுமையாக முயற்சி செய்து இம்முறை பாராளுமன்றத்திற்குள் நுழைகிறார்.
இம்முறை அவர் அணிக்கு இரண்டு ‘சீற்றுகள்’ கிடைத்திருக்கின்றன.
கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட குழப்பங்களும் இவர்களது வெற்றிக்குக் கைகொடுத்திருக்கின்றன.
முகநூலில், ‘பத்தாண்டுதவத்தின் பலன்’ என்று இவரது வெற்றியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இக்கூற்றில், அவர்களது மனதிலிருந்த பதவி நோக்கிய ஏக்கம் தெளிவாய்ப் புரிகிறது.
எவ்வாறாயினும் இவர்களது வெற்றி பாராட்டத் தக்கதேயாம்.
ஆனால் இவர்களால் மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்ட,
‘ஒரு நாடு இரு தேசம்’ என்ற தீர்வும்,
‘சர்வதேச ஆதரவுடன் போர்க்குற்ற விசாரணை’ என்ற கொள்கையும்,
நிச்சயம் இவர்களை சங்கடப்படுத்தப் போகின்றன.
போர் நடத்திப் புலிகளை வென்ற அணியினர்,
பெரும்பான்மை வெற்றி பெற்று மத்தியில் ஆட்சி அமைத்திருக்கும் நிலையில்,
அறிவிக்கப்பட்ட தமது கொள்கையில் நூறில் ஒரு பங்கைத் தானும்,
இவர்களால் நிறைவேற்ற முடியுமா?
‘முடியாது!’ என்பதே யதார்த்தமான பதிலாய்த் தோன்றுகிறது.
இதுவரை வெளியில் இருந்துகொண்டு,
சுலபமாய் கூட்டமைப்பிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த இவர்கள்,
தமிழ் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இனித்தான் இவர்களது சங்கடம் தொடங்கப் போகிறது.

* * *

அண்மையில் கள்ளவாக்குப் பற்றி கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு,
பதிலளித்த கஜேந்திரகுமார் அவர்கள்,
பொது வாக்களிப்பு எண்ணிக்கையில் அது சாத்தியமில்லை.
விருப்புவாக்கு எண்ணுதலில் அது சாத்தியம் என்றும் சொல்லி,
மாவையை அதற்கு முன்னுதாரணமாய்க் காட்டியிருக்கிறார்.
அப்படியானால் அந்த இரகசியத்தைத் தெரிந்திருந்த அவரது கட்சியிலும்,
அத்தகைய விளையாட்டுக்கள் நடந்தனவா? என்ற கேள்வியும்,
அதனால்த்தான் பலராலும் எதிர்பார்க்கப்பட்ட மணிவண்ணன்,
மூன்றாம் இடத்தை அடைந்தாரா? என்ற கேள்வியும் எழுந்தால்,
அதற்கு கஜேந்திரகுமார் என்ன பதில் சொல்லப்போகிறார்?

* * *

தேர்தல் முடிவுகள் வெளியானபோதும்,
சுமந்திரன்மீதான கருத்துத் தாக்குதல்கள் தொடர்ந்தன.
வாக்குகள் எண்ணும் களத்தில் ஒருவர் வீதியில் நின்று,
முதலில் சுமந்திரன் வாக்கு எண்ணும் இடத்திற்கு வராமை பற்றி குற்றம் சொன்னார்.
பின்னர் சுமந்திரன் அவ்விடத்திற்கு வந்ததும், வந்தது பற்றிக் குற்றம் சொன்னார்கள்.
சசிகலாவுக்கும் சுமந்திரனுக்குமான பிரச்சினை கூட்டமைப்பின் உட்கட்சிப் பிரச்சினை.
ஆனாஜுல், அதுபற்றி கூட்டமைப்புக் கவலைப்பட்டதை விட,
சிவாஜிலிங்கமும் ஸ்ரீகாந்தாவும் கவலைப்பட்டதுதான் அதிகம்.
களத்தில் நின்று ‘உருவாடிய’ அவர்களின் செயல்,
அவர்கள் பற்றிய மதிப்பைக் குறைத்தது.

* * *

விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை முழுமையாய் வெளிவருவதற்கு முன்னரே,
‘அவர் வென்று விட்டார், இவர் வென்றுவிட்டார்’ என்று,
முகநூல்களில் வெளிவந்த செய்திகள் தேவையில்லாமல் மக்களைக் குழப்பின.
இடைநிலையில் வெளிவந்த தேர்தல் முடிவுகளைக் கொண்டு,
தத்தம் அணிசார்ந்த தலைவர்களுக்கு வாழ்த்துக்கள் போடுவதில்,
முகநூல் போராளிகள் முன் நின்றனர்.
அருந்தவபாலன் வென்றுவிட்டதாய் முதலில் செய்தி வந்தது.
பின்னர் விக்னேஸ்வரன் வென்றதாய் அம்முடிவு மாற்றி உரைக்கப்பட்டது.
அதேபோலத்தான் சசிகலா வெற்றி பெறுவதாக முதலில் வந்த செய்தி,
பின்னர் அவருக்கு நான்காம் இடம்தான் கிடைத்ததாய் மாறி, உண்மை உரைத்தது.
இந்நிலையில் சுமந்திரன், வாக்குகளைத் தனக்குச் சாதகமாக மாற்றிவிட்டார் என்று,
மேற் சொன்ன பிரமுகர்கள் போர்க்கொடி தூக்கத் தொடங்கினர்.
முதலில் வந்த அருந்தவபாலனின் வெற்றிச் செய்தி,
முதலமைச்சரின் வெற்றிச் செய்தியாய் மாற்றப்பட்டபோது,
இதே குற்றச்சாட்டை முதலமைச்சர்மேல் ஏன் சாட்டக்கூடாது? என்பதற்கான பதிலை,
தாம் தராமலேயே மேற் குழுவினர் சுமந்திரன்மீது குற்றம் சாட்டி நின்றது நகைப்பைத் தந்தது.

* * *

மு.முதலமைச்சரோடு இணைந்த மாற்றணியினர் தேர்தலுக்குப்பின் செய்துகொண்டிருக்கும்,
அநாகரிகச் செயல்கள் மக்களை முகம் சுழிக்க வைத்திருக்கின்றன.
திருமதி சசிகலா அவர்களின் தோல்வியை வைத்து,
அவர்கள் நடிக்கும் நாடகங்களால் சமுதாயத்திற்குள் ஏகப்பட்ட குழப்பங்கள்.
சுமந்திரனின் ஆதரவாளர்கள் சசிகலாவை மிரட்டுவதாகவும்,
சுமந்திரனால் வாக்கு எண்ணிக்கை மாற்றப்பட்டதாகவும்,
விருப்புவாக்கு எண்ணிக்கைமுடிவு இறுதியாய் வெளிவருவதன் முன்னரே,
இவர்கள் பண்ணிய குழப்பத்தில் சசிகலா அவர்களே தடுமாறிப் போனது உண்மையாம்.
மாற்றணியினரின் திட்டமிடப்பட்ட முகநூல் பிரச்சாரத்தால்,
மக்களும்கூட மேற் சொன்ன விடயங்கள் எல்லாம் நடந்து விட்டதாய் எண்ணிக் கொந்தளித்தனர்.

* * *

ஆனால் இன்று உண்மை பகிரங்கமாகிவிட்டது.
சசிகலா அவர்களே மேற் சொன்ன எதுவும் நடக்கவில்லை எனப் பேட்டி அளித்திருக்கிறார்.
இவ்விடயத்தில், துணிவானவர் என நான் மதிப்பு வைத்திருந்த,
சிவாஜிலிங்கம் அவர்களின் நடவடிக்கைகள் பெரிதும் கவலை தந்தன.
மாற்றணியின் பிரச்சினை என்று தெரிந்தும், பிரச்சினைகளைக் கிளப்பவேண்டும் என்பதற்காக,
வெட்கமே இல்லாமல் சிவாஜிலிங்கம், அனந்தி, அங்கஜன் போன்றோர்,
சசிகலாவின் வீடு தேடிச்சென்று நடத்திய நாடகம் அருவருப்பைத் தந்தது.
மேலிடத்தின் ஆதரவோடுதான் வாக்கெண்ணிக்கையில் சுமந்திரனால்,
மாற்றம் செய்யமுடிந்திருக்கிறது என்று,
மேலிடத்தின் ஆளான அங்கஜனிடமே சிவாஜிலிங்கம் முறையிட,
பாவம், அங்கஜன் சங்கடப்பட்டு நெளிந்து கொண்டிருந்தார்.

* * *

இதேபோல், தேசியப்பட்டியல் விடயத்தில் விலக்கப்பட்ட மாவையின் இல்லத்திற்கு,
சிவாஜிலிங்கமும் ஸ்ரீகாந்தாவும் சென்று செய்த ’வால்முறுக்கல்களும்,’
அநாகரிகத்தின் வெளிப்பாடாகவே மக்களால் பார்க்கப்பட்டன.
குண்டு இருப்பவன் துப்பாக்கியால் சுடுவான்,
இல்லாதவன் ‘சோங்கால்’ தான் அடிக்க முயல்வான் என்பார்கள்.
அந்தக் கதைதான் இங்கும் நடந்தது.
‘சோங்கால்’ அடிக்க முற்பட்ட இக்கூட்டத்தின் முயற்சிகள் கூட,
பெரும்பாலும் மக்கள் மத்தியில் தோற்றுத்தான் போய்விட்டன.
பொய்மையைத் திட்டமிடுவதில் இந்தக் கூட்டம் காட்டிய வீரியம்,
தமிழினத்தின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்பது மட்டும் நிச்சயம்.

* * *

இவ்விடயத்தில் முதலமைச்சரின் கட்சியில் இணைந்திருக்கும்,
சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் காட்டும் நிதானம் மகிழ்வைத் தருகிறது.
முன் சொன்ன குழப்பங்கள் எதிலும் கலந்து கொள்ளாத அவர்,
அண்மையில் வெளியிட்ட ஓர் அறிக்கை,
அவரைப் பொறுப்புமிக்க ஒரு தலைவராய் இனங்காட்டியிருக்கிறது.
அத்தகையோரை வைத்து மீண்டும் இன ஒற்றுமையை உருவாக்க,
கூட்டமைப்பு முயல்தல் நன்றாம்.
அதேபோல இம்முறை தேர்தல் களத்திலும் வெற்றியின் பின்னுமாக,
எதிரணிகளை விமர்சிக்காத டக்ளஸ் தேவானந்தா அவர்களும்,
பாராட்டுக்குரியவராகிறார்.

* * *

எல்லாம் முடிந்துவிட்டது.
முன்னாள் முதலமைச்சர் செய்த திட்டமிட்ட கூத்துக்களாலும்,
கூட்டமைப்பில் தமிழரசுக்கட்;சி செய்த சில எதேச்சாதிகார முடிவுகளாலும்,
ஒன்றாய் இருந்த தமிழினம் இன்று பலவாக உடைந்துவிட்டது.
தனது வழமையான வெற்றியிலிருந்து தாழ்ந்து,
கூட்டமைப்பு இம்முறை பத்து இடங்களை வென்றிருக்கிறது.
கஜேந்திரகுமார் அணியினர் இரண்டு இடங்களையும்,
முன்னாள் முதலமைச்சர் அணியினர் ஒரு இடத்தையுமாக,
மொத்தம் பதின்மூன்று இடங்களை தமிழ்த்தேசியம் பேசும் கட்சிகள் பெற்றுள்ளன.
சிலகாலத்தின் முன்பு கூட்டமைப்பு 22 இடங்களைப் பெற்று,
தமிழ்மக்களின் ஒருமித்த குரலாய் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தது.
இன்று பேரினக்கட்சி ஒன்றுபட்டு பலத்தோடு உள் நுழைந்த நிலையில்,
நம் தமிழ்த்தலைவர்கள் பிரிவுபட்டு நிற்கின்றார்கள்.
புதிய அரசாங்கம் பதவிப்பிரமாணம் செய்தகையோடு,
தமிழ்க்கூட்டமைப்பினர் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் அல்ல என்றும்,
சமஷ்டி, அரசியல் கைதிகள் விவகாரம், வடகிழக்கிற்கான மக்கள் வாக்கெடுப்பு,
இராணுவத்தை அகற்றுதல் போன்ற பேச்சுக்கே இடமில்லை என்றும்,
நமது தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தினதும் கோரிக்கைகளை நிராகரித்து,
அதிரடியாய் அறிவித்திருக்கிறது.
இனி என்ன செய்யப்போகிறார்கள் நம் தமிழ்த்தலைவர்கள்?

* * *

பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும்
கொல் குறும்பும் இல்லது நாடு
ஒரு இனம் உருப்பட வள்ளுவன் சொன்ன இலக்கணம் இது.
வேறுபட்ட குழுக்களும், ஒருவர்க்கொருவர் இடையிலான உட்பகையும்,
தலைவனுக்குத் தீமை செய்யவல்ல எதிராளிகளும் இல்லாத,
நாடும் இனமுமே உருப்படும் என்கிறான் வள்ளுவன்.
வள்ளுவன் நீக்கச் சொன்ன இவை அனைத்தும்,
எங்கள் தமிழினத்திடம் நீங்காது நிறைந்து கிடக்கின்றன.
தந்தை செல்வா சொன்ன கடவுள் வந்தாலும்,
இனி நம் இனத்தைக் காக்க முடியுமா?
தெரியவில்லை!

* * *

## கூட்டமைப்பு திருந்தாவிடில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில் –

இந்த தேர்தலில் எமது இருப்பை கேள்விக் குறியாக்கியவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றிருக்கின்றார்கள். தமிழர்கள் பூர்வீகமானவர்கள் இல்லை என்று சொல்லும் அவர்கள், அந்த சிந்தனையை எப்படியும் நிலைநாட்டுவார்கள்.

எமது மக்களின் வாக்களிப்பை பார்க்கும்போது தேசியத்தை விட அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்திருப்பதை பார்க்க முடிகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதனை எதிர்பார்ப்பது தவறில்லை. ஒரு குடும்பம் எனக்கு அனைத்து வசதியும் கிடைத்திருப்பதாக கருதுகின்றபோது தான் அந்த இயலாமையை ஏனையவர்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

எனவே இந்த சூழலை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி கையாளப்போகின்றோம் என்பது மிகவும் சவாலான விடயம்.

ஏனெனில் பெரும்பான்மை பெற்றுள்ள அரசாங்கம் அபிவிருத்தியையும் முன்னெடுத்து அதனுடன் இணைந்து தேசியத்தின் தன்மையை உடைக்கின்ற செயற்பாட்டையும் மேற்கொள்ளும். இவை எமக்கு சவாலாகவே இருக்கபோகின்றன.

எனவே நாங்கள் தூங்கமுடியாது. எமது மண்ணைக் காப்பாற்றும் பொறுப்பு எம் தலைமேலே சுமத்தப்பட்டிருக்கின்றது.

எங்களைப் பொறுத்தவரை காணமல் போனோர் மற்றும் அரசியல் கைதிகள் விடயங்கள் முக்கியமானவை. அது எமக்கு விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. இந்தவிடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும். அதற்கான அழுத்தங்கள் கொடுக்கப்படும்.

தேர்தலின்போது கூட்டமைப்பிற்குள்ளேயும் பல பிரச்சினைகள் இருந்தன. வெளியில் இருந்தும் பலர் விமர்சித்தார்கள். எங்களுக்குள்ளேயே நாம் சண்டையிட்டோம். இதனை வாய்ப்பாக பயன்படுத்தி சிங்கள கட்சிகள் தமது காரியத்தை செயற்படுத்தியுள்ளார்கள்.

எனவே மக்களின் விடுதலை என்று பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்து நாடாளுமன்றத்தில் ஒரு குழுவாக செயற்படும் முயற்சியை நாம் எடுக்கவுள்ளோம். அதிலே வரக்கூடியவர்கள் வரலாம். அதற்கான பேச்சுக்கள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

மக்களின் சிந்தனை கூட்டமைப்பிற்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது. மக்கள் எமக்கு நல்ல பாடத்தை தந்திருக்கின்றார்கள். அதனை இனியும் உணரவில்லையாயின் கூட்டமைப்பை கடவுளாலும் காப்பாற்ற முடியாது.! என்றார்.

# இடியன் துவக்கால் தனக்குத்தானே வெடி வைத்து உயிரை மாய்த்த நபர்

## மாங்குளம் பகுதியில் சம்பவம்

முல்லைத்தீவு – மாங்குளம் பகுதியில் இடியன் துவக்கால் தனக்குத்தானே வெடி வைத்து நபர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மாங்குளம் – துணுக்காய் வீதியைச்சேர்ந்த, 37 வயதுடைய – இரகுநாதன் கௌரிதரன் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் இடியன் எனப்படும் துப்பாக்கியினால் தனக்குத் தானே வெடி வைத்து உயிரை மாய்த்துள்ளார்.

உறவினர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் காரணமாக விரக்தி யுற்ற இந்த நபர் தற்கொலை செய்து கொண் டார் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் கூட்டமைப்பினரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அதேபோன்று மஹிந்த அணியிலுள்ள பலரும் இதே கருத்தைத் தெரிவித்திருந்தனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையான வடக்கு, கிழக்கைக் கைப்பற்றி விட்டோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்துக்கள் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்ததாவது:!

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தலா மூவர் வீதம் 6 தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும், திருகோணமலையில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும், மட்டக்களப்பில் 2 தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும், அம்பாறையில் தேசியப்பட்டியல் மூலம் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும் நாம் பெற்றுள்ளோம். வடக்கு, கிழக்கிலிருந்து மொத்தமாக 10 தமிழ்ப் பிரதிநிதித்துவத்துடன் நாங்கள் நாடாளுமன்றம் செல்கின்றோம். ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் அதன் பங்காளிக் கட்சிகளும் வடக்கு, கிழக்கில் 11 பிரதிநிதித்துவங்களைப் பெற்றிருந்த போதிலும் அதில் 5 பேர்தான் தமிழ்ப் பிரதிநிதிகள். ஏனையவர்களில் நால்வர் சிங்களவர்கள்; இருவர் முஸ்லிம்கள்.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையைத் தாம் கைப்பற்றி விட்டோம் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனிமேல் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்லர் எனவும், தமிழ் மக்களின் மனதைத் தாம் வென்று விட்டோம் எனவும் ஆளுந்தரப்பினர் தம்பட்டம் அடிக்கக்கூடாது.

கடந்த முறையைவிட 6 ஆசனங்கள் இம்முறை எமக்குக் குறைந்திருந்தாலும் நாம் பலத்துடன்தான் நாடாளுமன்றம் செல்கின்றோம். அங்கு எதிரணியில் இருக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்து தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்போம்.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக சர்வதேச சமூகத்தினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையே ஏற்றுள்ளனர். தேர்தலுக்கு முன்பும் சரி, தேர்தலுக்குப் பின்பும் சரி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேசப் பிரதிநிதிகள் எம்முடன்தான் தொடர்ந்து பேசிக்கோண்டிருக்கின்றார்கள். எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும், அரசியல் தீர்வு விடயம் குறித்தும் ராஜபக்ஷ அரசு எம்முடன் பேசியே ஆக வேண்டும். தீர்வுவிடயம் தொடர்பில் பேச்சுக்கள் தொடர்ந்தால் அரசுக்கு எம்மாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம்.

அரச தரப்பினர் வீரவசனம் பேசிக் கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் நலன் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கண்டால்தான் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்! என்றார்

## ரணில் குழுவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, மலிக் சமரவிக்கிரம ஆகியோருக்கும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசாநாயக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன். ஜே.சி. வெலியமுன, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன ஆகியோருக்கும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திவிநெகும திணைக்களமாக மாற்றியமைக்கும் போது சுயமாக விலகிக்கொண்ட ஊழியர்களுக்கு நஷ்டஈடு மற்றும் பணிக்கொடை வழங்கியமை , சுபீட்சமான வீடமைப்பு திட்டத்தில் சலுகை வழங்கப்பட்டமை போன்ற விடயங்களுக்காக தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைத்தமை அரசியல் பழிவாங்கல் என டொக்டர் நிஹால் ஜயத்திலக்க தெரிவித்துள்ளார்.

கடுவலை முன்னாள் நீதவான் தம்மிக்க ஹேமபாலவையும் சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சியாளராக முன்னிறுத்துமாறு நிஹால் ஜயத்திலக்க சார்பிலான சட்டத்தரணி சௌரத் ஜயசுந்தர ஆணைக்குழுவை கோரியுள்ளார்.

இவ்விடயங்களை ஆராய்ந்த ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன எதிர்வரும் 21 ம் திகதி தம்மிக்க ஹேமபாலவுக்கும் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்தார்.



11

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில்
வருடாந்த உற்சவத்தையொட்டி
'காலைக்கதிர்' நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

### போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

### பரிசு விபரம் :

முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00
இரண்டாம் இடம் - ரூபா 10,000.00
மூன்றாம் இடம் - ரூபா 5,000.00
தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. யாழ்ப்பாணத்தில் சைவ பரிபாலன சபையினால் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட இந்துப் பாடசாலை எது?**

..........................................................................................

**2. திருத்தொண்டர் தொகை எனும் நூல் யாரால் பாடப்பட்டது?**

..........................................................................................

**3. தாயுமானவரால் பாடப்பெற்ற பராபரக் கண்ணியில் போற்றப் படும் கடவுள் யார்?**

..........................................................................................

**4. சேக்கிழார் பெருமானால் பாடப்பெற்ற புராணம் எது?**

..........................................................................................

**5. நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வரலாற்றைச் சொல்லும் நூல் ஒன்று தருக?**

..........................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

11

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் :..........................................................
2. பிறந்த திகதி :..........................................................
3. கல்வி கற்கும் தரம் :..................................................
4. பாடசாலை :..............................................................

..........................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# நேற்றுப் பதவியேற்ற இராஜாங்க அமைச்சர்கள்



39 இராஜாங்க அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்ற பின்னர்ஜனாதிபதி, பிரதமருடன் காட்சியளிப்பதைக் காணலாம்.





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 19 ஆம் நாள் - திருக்கார்த்திகை உற்சவத்தில் நேற்று மாலை, அழகிய அன்னங்களில் வள்ளி, தேவயானை சமேதராக, தங்கமயில் வாகனத்தில் முத்துக்குமாராக வலம்வந்து முருகப் பெருமான் அருள்பாலிக்கும் காட்சிகள்..

படங்கள் : ஐங்கரன் சிவசாந்தன்

## சீரடி சாயியின் திருவிக்கிரகம் விடத்தற்பளையில் பிரதிஷ்டை





விடத்தற்பளை அலங்கார வேலாயுத சுவாமி ஆலயத்தின் (வயற்கரை காசி முருகன்) சந்நிதானத்தில் சீரடி சாயியின் திருவிக்கிரகம் அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

உசன் சந்தியில் இருந்து கிட்டதட்ட 7 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள விடத்தற்பளையில் அலங்கார வேலாயுத சுவாமி ஆலயம் (வயற்கரை காசிமுருகன்) மற்றும் பழமையும் புதுமையும் வாய்ந்த புதுகுளத்து அம்மன் ஆலயமும் ஆகியன நிலைபெற்றுள்ளன. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று சொல்லப்படுகின்ற மூன்றும் கூடி உள்ள புனித இடமாகும்.

பல காலமாக புல்லும் புதருமாகிப் பரிபாலிக்கப்படாது கைவிடப்பட்டு இருந்த இந்த வயல்கரை காசி முருகன் ஆலயம் மிகவும் இப்போது நன்றாக புனரமைப்பட்டு தினமும் கிரியைகள் இடம்பெறுகின்றன.

சென்ற மார்ச் மாதம் மகா கும்பாபிஷேகம் ஆலயத்தின் பூசகரும் தர்மகர்த்தாவுமான வீரகத்தியார் காசிநாதரினால் நடத்தப்பட்டது.

பாபாவின் தொண்டர் பொன். குமாரலிங்கத்தின் பங்களிப்பால் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆத்மீக குருபகவான் சீரடி சாயியின் திருவிக்கிரகம் முருகன் சந்நிதானத்தில் சிறு கட்டடம் நிறுவப்பட்டு, அங்கு ஸ்தாபித்து, கடந்த ஜூன் 18 ஆம் திகதி யாழ் வண்ணார்பண்ணையில் உள்ள ஈழத்து சீரடி பாபா மந்திரின் இராகவன் பாலசந்திரனால் விசேட கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

## 16 பவுண் நகைகள் கொள்ளை: பெண் உட்பட எட்டு பேர் கைது



எஸ்.நிதர்ஷன்

மானிப்பாய் பகுதியில் நள்ளிரவு வேளையில் வாளைக் காட்டி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி 16 பவுண் நகைகளை கொள்ளையடித்த குற்றத்தில் பெண் உட்பட எட்டு சந்தேக நபர்களை யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மானிப்பாய் பகுதியில் கடந்த மாதம் 21ம் திகதி நள்ளிரவு வீடு ஒன்றுக்குள் புகுந்த மர்ம கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்களை வாள்சிக் காட்டி அச்சுறுத்தி வீட்டில் இருந்த 16 பவுண் நகைகளைக் கொள்ளையடித்து சென்றுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மற்றும் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வந்தனர்.யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நவாலி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரை கைது செய்து விசாரணை செய்தபோது அவரிடம் இருந்து 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.மேலும் அந்தச் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பெண் உட்பட 8 பேர் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்படும் நகைகளில் 12 பவுண் நகைகளும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த கொள்ளைச் சம்பவத்திற்கு பயன்படுத்தபட்ட தாக கூறப்படும் வாள்,மோட்டார் சைக்கிள் போன்றவற்றையும் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம்,

சங்கானை, பருத்தித்துறை போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்ற பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

Car For Sale



NISSAN SUNNY, 2000, reg 2003, B15, 1290CC, Japan, White, AC, auto shutters, central lock, security alarm, AMW Maintenance, no accident history, 168000km. for sale Point Pedro 0774694262

## குருநாகல் மேயரின் பிடியாணை ஒகஸ்ட் 24 வரை இடைநிறுத்தம்

குருநாகல் மாநகர சபை மேயர் துார சஞ்சீவவைக் கைதுசெய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை நடைமுறைப்படுத்துவதை இம்மாதம் 24ஆம் திகதி வரை இடைநிறுத்துமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தால் தன்னைக் கைதுசெய்வதற்குப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை இடைநிறுத்துமாறு கோரி, குருநாகல் மாநகர சபை மேயரினால், ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, குறித்த மனுவை பரிசீலனை செய்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2020 இல் வெளியிடப்பெற்றது.